# பாட்டாளி சிந்தனை

Volume 25 No. 4 சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

December 2014 தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரு 3


# கட்சியின் புதிய அலுவலகம் புரட்சியின் நரம்பு மையமாகச் செயல்படும்

## புதிய மத்திய அலுவலகத்தின் திறப்புவிழாவில் தோழர் பிரவாஸ் கோஷ்

நவம்பர் 17, 2014 அன்று, மாபெரும் லெனின் தலைமையில் ரஷ்யாவில் வரலாற்றுச் சிறப்புமிக்க நவம்பர் புரட்சியை வெற்றிகரமாக நடத்திய 97 வது ஆண்டு தொடக்க நாளில், நமது கட்சியான, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இன், புதிய மத்தியத் தலைமை அலுவலகம் திறக்கப்பட்டது. கட்சி ஊழியர்கள் மற்றும் அனுதாபிகள் நூற்றுக் கணக்கானோர் புதிய மத்திய அலுவலகத் திறப்பு விழாவைக் காண்பதற்காக கல்கத்தாவில் உள்ள சுபோத் மல்லிக் சதுக்கத்தில் உள்ள லெனின் சாரணியில் குழுமியிருந்தனர். சிதில மடைந்திருந்த பழைய கட்டிடம் இருந்த இடத்தில் புதிய கட்டிடம் கட்டியெழுப்பிவந்த நேரத்தில், அவ்வழியே பயணித்த மக்கள், கட்டிட நிதிக்கு மிகுந்த ஆர்வத்தோடு நன்கொடை அளித்த கிராம, நகர மக்கள் என பலபேர் இந்தப் புதிய கட்டிடம் எப்போது திறக்கப்படும் என்று பேரார்வம் காட்டிவந்தனர்.

எனவே நவம்பர் புரட்சி அனுஷ்டிப்பு தொடக்க நாளான நவம்பர் 17 அன்று கட்டிடம் திறக்கப்படும் என்று முடிவுசெய்யப்பட்ட உடன், அது பரவலாக பல வழிகளில் தெரிவிக்கப்பட்டது. தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் தனது புரட்சிகர சகாக்கள் வெகுசிலருடன் சேர்ந்து நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க கடுமையான போராட்டத்தின் போக்கில் 1948இல் நமது கட்சி உருவாக்கப்பட்டு 66 ஆண்டுகள் கழிந்த பின்னர் நமது புதிய கட்சி அலுவலகம் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்கள் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாசே துங், சிப்தாஸ் கோஷ் ஆகியோரின் ஒளிவீசும் உருவப் படங்களுடன் உயர்ந்து நிற்கிறது.

இத்தனை ஆண்டுகளாக, நமது நாடு முழுவதும் புரட்சிகர வெகுஜன இயக்கங்களைக் கட்டியெழுப்பும் வரலாற்றுப்பூர்வ பணியை மேற்கொள்வதில் கடுமையான உழைப்பைச் செலுத்தியதோடு உலக புரட்சிகர இயக்கத்தை வலுப்படுத்துவதற்கும் தனது பங்களிப்பை நமது கட்சி செய்துவருகிறது.

தோழர் பிரவாஸ் கோஷ், நமது பொதுச் செயலாளர், நவம்பர் 17 அன்று நண்பகல் 12 மணிக்கு செங்கொடியை ஏற்றியபோது நமது கட்சியின் புதிய அலுவலகத்தின் முன் திரண்டிருந்த மக்கள் நாட்டின் அனைத்து மூலை முடுக் கெல்லாம் புரட்சிகர இயக்கங்களை பரவச் செய்ய உழைக்கும் மக்களுக்கு அறைகூவல் விடுத்து எழுப்பப்பட்ட முழக்கங்கள் விண்ணை அதிரச் செய்தன.

நமது கட்சியின் தலைவர்கள் மலர்களாலும் மலர்வளையங்களாலும் பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் தலைவர்கள் லெனின் மற்றும் சிப்தாஸ் கோஷ் ஆகியோருக்கு புரட்சிகர மரியாதையைச் செலுத்திய போது செங்கொடி உயரே பறந்துகொண்டிருந்தது. தோழர் பொதுச் செயலாளர், பொலிட்பீரோ உறுப்பினர்கள் தோழர்கள் ரஞ்சித்தார், மணிக் முகர்ஜி, தோழர் அசித் பட்டாச்சார்யா ஆகியோர் மரியாதை செலுத்தினர். கடுமையான உடல்நலக் குறைவால், அபாயத்திலிருந்து திரும்பிய, பொலிட் பீரோ உறுப்பினர் தோழர் கிருஷ்ண சக்கரவர்த்தி அவர்களால் அஞ்சலி செலுத்த வரமுடியவில்லை. அவரது சார்பில் மேற்கு வங்க மாநில செகரட்ரியேட் உறுப்பினர் தோழர் தபன் ராய் சௌத்ரி மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் தோழர்கள் தேவப்பிரசாத் சர்க்கார், சி கே லூகோஸ், கே ராதாகிருஷ்ணா, சௌமன் பாசு, கோபால் குண்டு, சத்யவான், சங்கர் சகா, சாயா முகர்ஜி ஆகியோரும் மலர்தூவி மரியாதை செலுத்தினர். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்திருந்த மாநிலச் செயலாளர்களும் பிரதிநிதிகளும் மலர்தூவி மரியாதை செலுத்தினர். அதற்குப் பின்னர் தோழர் பிரவாஸ் கோஷ் தனது சுருக்கமான ஆனால் உத்வேகமூட்டும் உரையை நிகழ்த்தினார். புதிதாகக் கட்டப்பட்ட கட்சி அலுவலகத்தின் 3வது மாடியில் தோழர் சிப்தாஸ் கோஷ் பயன்படுத்திய பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன, அவை அங்கே கூடியிருந்த தோழர்களை உணர்ச்சியில் ஆழ்த்தியது.

தோழர் சிப்தாஸ் கோஷ் எங்கே தங்கியிருந்து கட்சியை கட்டியெழுப்பி, கட்சியையும் அதே போன்று நாடுமுழுவதும் வெகுஜன மற்றும் வர்க்கப் போராட்டங்களை வழிநடத்தினாரோ அந்தப் பழைய கட்டிடம் இருந்த இடத்தில் தற்போது புதிய கட்டிடம் உயர்ந்து நிற்கிறது. இதை தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ளதாலும், இங்கிருந்துதான் புரட்சிகர இயக்கங்களையும் கட்சித் தலைமை வழிநடத்தியதால் இன்று நாடு முழுவதும் எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சி பரவியிருக்கிறது, அதோடு தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனை பல்வேறு கண்டங்களைச் சேர்ந்த பல்வேறு நாடுகளில் அதன் தாக்கத்தை ஏற்படுத்திவருகிறது. வருங்காலத்திலும் அந்தப் பணியை இந்த புதிய கட்டிடம் மேற்கொண்டு எழவிருக்கும் புரட்சியைக் கண்ணுறும்.

### தோழர் பிரவாஸ் கோஷ் ஆற்றிய உரை

இன்று நவம்பர் 17. இதே நாளில்தான் 1917 இல் மாபெரும் தலைவர்கள் லெனின் மற்றும் ஸ்டாலின்



கட்சியின் புதிய மத்திய அலுவலகம்

அவர்களது தலைமையில் ரஷ்ய உழைக்கும் வர்க்கம் நடத்திய போராட்டம் முதலாளித்துவத்திற்கு முடிவுகட்டி சோசலிசத்தை வெற்றிகரமாக நிறுவியது. அதோடு மாபெரும் மார்க்ஸ் – ஏங்கெல்சின் சிந்தனை களை சரியாக பிரயோகப்படுத்தி அனைத்து விதமான அடக்குமுறைகளையும் சுரண்டல்களையும் ஒழித்து விஞ்ஞான சோசலிசத்தை நிறுவியது. அது ஒரு புதிய அனுபவத்தை, ரவீந்திரநாத்தாகூரின் மொழியில் கூறினால், மனிதகுல நாகரீக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைப் படைத்தது.

உலகம் முழுவதிலுமுள்ள அனைத்துப் போராடும் மக்களும், பல்வேறு நாடுகளில் தங்களது விடுதலைக்காகப் போராடிய உழைக்கும் வர்க்கம் மற்றும் ஒடுக்கப்பட்ட கோடிக்கணக்கானோர் இந்த புதிய நாகரீகத்தை பாராட்டினர், இதனால் ஒரு புதிய நம்பிக்கையைப் பெற்றனர். ரொமைன்

தொடர்ச்சி 2ம் பக்கம்

# பங்களாதேஷ் சமாஜ்தந்திரிக் தள் (மார்க்சிஸ்ட்) ஸ்தாபிக்கப்பட்டது



நவம்பர் 20–23 தேதிகளில் பங்களாதேஷ் டாக்கா நகரத்தில் நடைபெற்ற மத்திய மாநாட்டில் பங்களாதேஷ் சமாஜ்தந்திரிக் தள் (மார்க்சிஸ்ட்) கட்சி மார்க்சிசம்–லெனினிசம் சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டது. தோழர் மொபினுள் ஹைதர் சௌத்ரி அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்டு 9 உறுப்பினர்களை கொண்ட மத்தியக் கமிட்டி அமைக்கப்பட்டது. படத்தில் காண்பது திறந்தவெளி மாநாட்டில் பங்குகொண்டவர்கள். உட்படம் (இடமிருந்து) தோழர் மொபினுள் சௌத்ரி, தோழர் சுபரன்சு சக்ரவர்த்தி BASAD(M), தோழர் பிரவாஸ் கோஷ், பொதுச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்).

# கல்கத்தாவில் கட்சியின் புதிய மத்திய அலுவலகம் திறப்பு

1ம் பக்கத் தொடர்ச்சி

ரோலண்ட், பெர்னாட் ஷா, ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் போன்ற ஐரோப்பாவின் அன்றைய புகழ்பெற்ற மனிதர்கள் அனைவரும் சோசலிச நாகரீகத்தை வரவேற்றதோடு அதற்கு ஆதரவாக நின்றனர். நமது நாட்டிலும்கூட, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், ரவீந்திரநாத்தாகூர், சரத்சந்திரர், நஸ்ரூல், பிரேம்சந்த், பகத்சிங், சுப்பிரமணிய பாரதியார் போன்ற வழிகாட்டும் தீபங்கள் சோசலிச நாகரீகத்தை ஒரு புதிய சூர்யோதயம் என்று போற்றினர். இவை எல்லாம் வரலாற்றில் பதிக்கப்பட்டுள்ளது.

இந்த சோசலிசம் ஸ்டாலின் தலைமையில் வெல்லற்கறிய சக்தியாக விளங்கியது. இரண்டாம் உலகப்போரில் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் யூனியன் வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்ட பங்கை ஆற்றியிருக்காவிட்டால் பாசிச சக்திகளான ஜெர்மன்–இத்தாலி–ஜப்பான் அச்சு நாடுகளை முறியடித்திருக்க முடியாது என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். காலனிகள் மற்றும் அரைக் காலனிகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங் களையும் சோவியத் யூனியன் ஆதரித்தது. அதே நேரத்தில், ஒரு நீடித்த காலத்திற்குப் பிறகு, ஏகாதிபத்திய–முதலாளித்துவங்களின் சதியாலும் அதே போன்று ரஷ்யாவுக்குள்ளிருந்தே வந்த திருத்தல்வாத மற்றும் எதிர்புரட்சி சக்திகளாலும் சோவியத் சோசலிசம் வீழ்ந்தது. அதனைத் தொடர்ந்து, ரொமைன் ரோலண்ட் மொழியில் கூறினால், சகலமும் இருள் சூழ்ந்துபோனது. அந்த இருளில்தான் இன்று நாம் விழுந்து கிடக்கிறோம். ஆனாலும் கூட, இது ஒன்றும் முடிவல்ல என்பதை நாம் அறிவோம். நூற்றுக்கணக்கான ஆண்டுகள் போராட்டாமல் உலகில் எந்தவொரு மாபெரும் போராட்டமும் வெற்றி பெற்றதில்லை. இறையருள் பெற்றவர்கள் என்று கூறப்பட்டவர்களால் மதத்தை உருவாக்குவதற்கான போராட்டங்கள்கூட பல நூறாண்டுகள், பல வெற்றி தோல்விகளையும் தாண்டித்தான் நீடித்தது. பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி வெற்றிபெறுவதற்கே முன்னூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தேவைப்பட்டது. ஆனால் இந்த எல்லாப் போராட்டங்களும் அடக்குமுறையை நிரந்தரமாக ஒழிக்கும் போராட்டங்களே புரட்சிகளோ



தோழர் பிரவாஸ் கோஷ் மத்திய அலுவலகத்தை திறந்துவைத்து உரையாற்றுகிறார்
மேடையில் பொலிட்பீரோ மற்றும் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள்

அல்ல. அடிமைச் சமுதாயம், நிலப்பிரபுத்துவம், மற்றும் முதலாளித்துவம் ஆகியவற்றின் ஆயிரக்கணக்கான ஆண்டு வரலாற்றிற்கு எதிராக சோவியத் சோசலிசம் போராடவேண்டியிருந்தது. இவை எல்லாவற்றுடன், அது எழுபதுக்கும் மேற்பட்ட நீண்ட ஆண்டுகள் தலை நிமிர்ந்து நின்றது.

உலகின் ஒடுக்கப்பட்ட மக்களுடன், இந்திய மக்களும் விடுதலை, மாற்றம் மற்றும் போராட்டத்தை வேண்டுகின்றனர். ஆனால் அவர்கள் சரியான பாதையை அறியவில்லை. அந்தப் பாதையை மாபெரும் நவம்பர் புரட்சியால் மட்டுமே வழங்க முடியும். நமது நாட்டில் எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்), மாபெரும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் மற்றும் மா சே துங் ஆகியோரின் உற்ற சீடர், பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களால் உருவாக்கப்பட்ட ஒரே கம்யூனிஸ்ட் கட்சி மட்டும்தான் நீண்ட காலமாக நவம்பர் புரட்சிப் பதாகையை உயர்த்திப் பிடித்து வருகிறது.

புதிதாக கட்டப்பட்டுள்ள நமது மத்திய அலுவலகத்தைத் திறப்பதற்கான நாளாக வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நவம்பர் 17 ஐ தேர்வு செய்தோம். வயதான மூத்த தோழர்கள் தோழர் சிப்தாஸ் கோஷைப் பார்த்திருக்கிறார்கள், அவரது பல மதிப்புமிக்க உரைகளைக் கேட்டிருக்கிறார்கள், எப்படிப் பட்ட கடுமையான சிக்கலான போராட்டங்களைச் சந்தித்து கட்சி வளர்ந்தது என்பதை அவர்கள் அறிய வந்தனர்.

தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் 1969இல் ஒரு விவாதத்தில் கூறியதை நான் இங்கே வாசிக்கிறேன். 1944 முதல் 1951 வரை எப்படிப்பட்ட கடுமையான வேதனையான போராட்டத்தை தோழர் சிப்தாஸ் கோஷ் நடத்தினார் என்பதை நினைவூட்டுவதாக இது இருக்கும். அவர் கூறியதாவது;

'ஒரு புதிய கட்சியை நாங்கள் கட்டத் தொடங்கிய அந்த ஆரம்ப நாட்களை இன்னும் என்னால் நினைவு கூறமுடிகிறது – எங்களை ஆதரிப்பதற்கு சிலர்தான் இருந்தனர், தங்குவதற்கு ஒரு அறையைக் கூட எங்களால் ஏற்பாடு செய்துகொள்ள முடியவில்லை, அதோடு கடுமையான தடைகள் மற்றும் முற்றிலும் எதிர்மறையான சூழல்களின் நடுவே ஒரு புதிய கட்சியை கட்டியெழுப்புகின்ற எங்களது கடுமையான போராட்டத்தில், உணவு இல்லாமல் கூட கஷ்டப்பட வேண்டியிருந்தது. ஆனால் இவற்றிற்கெல்லாம் நாங்கள் கவலைப்படவில்லை. பல ஆண்டுகள் புல்–மெத்தைகளில் தான் படுத்தோம், பல குளிர் காலங்களை நாங்கள் அப்படித்தான் கழித்தோம். எங்களது பழைய நண்பர்கள் இன்றுகூட அதைக் கூறுவர். அதோடு அதற்காக எங்களிடம் எந்தவொரு அமைதியின்மையையும் ஒருபோதும் பார்க்க முடியவில்லை என்று அவர்கள் கூறுவர். எத்தனை நாட்கள் நாங்கள் உணவில்லாமல் இருந்திருப்போம், ஆனால் அதைப்பற்றி கூறுவதற்கு நாங்கள் வெட்கப் பட்டோம்! எங்களுக்குத் தேவையானவற்றை எங்களால் ஏற்பாடு செய்துகொள்ள முடியவில்லை, குறைந்த அளவு கூட வசூல் செய்ய முடியவில்லை, அதை எங்களது தோல்வியாகவே நாங்கள் கருதினோம். அதில் பெருமைப்பட என்ன இருக்கிறது? அதை எப்படி 'தியாகத்தின்' உச்சம் என்று கூறுவது?'.

அந்த நாட்களை தயவு செய்து நினைத்துப் பாருங்கள், கட்சி எப்படி வளர்ந்துள்ளது என்பதை உணர்ந்துபாருங்கள். நமது கட்சி உருவாக்கப்பட்ட போராட்ட வரலாற்றைப் பற்றியோ அல்லது தோழர் சிப்தாஸ் கோஷின் பேச்சுக்களையோ ஊடகங்கள் ஒருபோதும் பிரசுரிக்கவோ அல்லது ஒலிபரப்பவோ இல்லை. ஆரம்பம் முதலே பொதுமக்களின் பங்களிப்பை எதிர்பார்த்துதான் கட்சியை நடத்தி வருகிறோம்.

தற்போது புதிய கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ள இடத்தில் ஒரே ஒரு மாடி உடைய பழைய கட்டிடம் இருந்தது. அந்தக் கட்டிடத்தின் ஒரு சிறிய அறையில், 1949இல் நமது அலுவலக நடவடிக்கைகளைத் தொடங்கினோம். பின்னர் அந்த வீட்டின் மற்ற அறைகளுக்கும் நமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தினோம். அந்த வீடு கிட்டத்தட்ட விழுகின்ற நிலையில் இருந்தது. அந்த வீட்டின் சொந்தக்காரர் எந்தவொரு பராமரிப்புப் பணியையும் செய்யவில்லை. நமக்கும் வேறு இடத்திற்கு செல்ல முடியவில்லை. இத்தகைய சூழ்நிலைமையில் நமது கட்சி ஊழியர்கள், ஆதரவாளர்கள், அனுதாபிகள் அதே போன்று பொதுமக்கள் என அனைவருக்கும் நிதி உதவி செய்யுமாறு ஒரு வேண்டுகோள் விடுத்தோம். அப்படி திரட்டிய பணத்தைக் கொண்டு இந்த வீட்டை விலைக்கு வாங்கி, அந்த இடத்தில் தற்போது இந்த புதிய கட்டிடத்தை எழுப்பியுள்ளோம். இந்த நாளில், அந்தப் பழைய வீட்டை வாங்கி இந்த புதிய கட்டிடத்தைக் கட்டுவதற்கு நிதி உதவி செய்த நமது ஊழியர்கள், ஆதரவாளர்கள், அனுதாபிகள் மற்றும் பொதுமக்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கட்டிடத்தைக் கட்டும் பணியில் ஈடுபட்ட பொறியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கும் நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று நமக்கு மகிழ்ச்சியான நாள். இது நமக்கு பெருமிதமான நாளும் கூட. அதே நேரத்தில், இந்தக் கட்சியைக் கட்டுவதையே தனது லட்சியமாகவும் கனவாகவும் கொண்டிருந்த, இந்தக் கட்சிக்காக ஒரு சொந்த மத்தியக் கட்டிடம் வேண்டும் என்று விரும்பிய தோழர் சிப்தாஸ் கோஷ் இன்று உயிரோடு இல்லை என்பது நமக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது. அவரது புரட்சிகர சகாக்கள் தோழர்கள் நிஹார் முகர்ஜி, சச்சின் பானர்ஜி, சுபோத் பானர்ஜி, பிரித்தீஷ் சந்தா மற்றும் ஹிரேன் சர்க்கார் ஆகியோரும் இன்று இல்லாததைக் கண்டும் நாம் மிகுந்த வேதனை அடைகிறோம். அதே போன்று தபஸ் தத்தா, அசுத்தோஸ் பானர்ஜி, சிதேஸ் தாஸ் குப்தா, அனில் சென், சுகுமோல்தாஸ் குப்தா, யாகூப் பைலான், கல்யான் சௌத்ரி, அம்ரிடேஸ்வர் சக்ரவர்த்தி, பாட்ஷா கான், பிரதீபா முகர்ஜி, ரத்தன் முகர்ஜி போன்ற இன்னபிற தலைவர்களும் இன்று நம்மிடையே இல்லை. இங்கே நான் பெயர் கூறியவர்கள் நாம் பழைய கட்டிடத்தை விலைக்கு வாங்கிவிட்டோம் அதில் புதிய கட்சி கட்டிடம் கட்டி வருகிறோம் என்பதை இறப்பதற்கு முன்பு அவர்கள் அறிவர். அதில் பலர் புதிய அலுவலகம் கட்டுவதற்கு நிதியையும் வசூலித்துள்ளனர். இதில் பலர் மரணப் படுக்கையில் இருந்தபோது புதிய அலுவலகத்தைக் காணவிரும்பினர். அவர்கள் எல்லாம் இன்று நம்மி டையே இல்லை. அதே போல் தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனைப் பதாகையை உயர்த்திப் பிடித்தபோது போலீசாரின் துப்பாக்கித் தோட்டாக்களாலோ அல்லது ரௌடிக் கும்பலின் தாக்குதல்களாலோ கொல்லப்பட்ட எண்ணற்ற தியாகிகளும் இன்று நம்மிடையே இல்லை. இந்த மகிழ்ச்சியான, பெருமிதமான நாளில் அவர்கள் எல்லோரையும் வேதனையுடன் நாம் நினைவு கூர்கிறோம்.

நமது கட்சி பாட்டாளிகளின் புரட்சிகரக் கட்சி என்பதை நீங்கள் அறிவீர்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் நரம்புமண்டல மையமாக இந்த அலுவலகம் செயல்படும். தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையால் பலம் பெற்றுள்ள நாம், உலக ஏகாதிபத்தியம்



தோழர் பிரவாஸ் கோஷ் செங்கொடி
ஏற்றுகிறார்

–முதலாளித்துவம், திருத்தல்வாதம், மத அடிப்படைவாதம், அதோடு அனைத்துவிதமான கருத்துமுதல்வாதங்கள் போன்றவற்றிற்கு எதிரான நமது போராட்டத்தைத் தொடர்வோம் என்றும் பல்வேறு நாடுகளில் சக்திவாய்ந்த கம்யூனிஸ்ட் இயக்கங்களை உருவாக்குவதற்கு நமது உரிய பங்களிப்பை செய்வோம் என்றும் மீண்டும் ஒருமுறை உறுதியேற்கிறோம். அந்த மாபெரும் போராட்டத்தின் நரம்பு மண்டல மையமாக இந்த புதிய அலுவலகம் செயல்படும். நமது நாட்டில், முதலாளித்துவத்தைத் தூக்கியெறிந்து சோசலிசத்தைக் கட்டும் புரட்சிகரப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த லட்சியத்தை நிறைவேற்று வதற்கு, தொழிலாளர்கள், விவசாயிகள், பாட்டாளி கள், நடுத்தர வர்க்கத்தினர், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கையில் எரியும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கோரிக்கைகளை முன்வைத்து நாம் வர்க்க மற்றும் வெகுஜன போராட்டங்களை புரட்சிகரப் பாதை உயர்ந்த பாட்டாளிவர்க்க அறநெறி மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் நடத்திவருகிறோம். அந்தப் போராட்டங்களை வளர்ப்பதில் இந்த அலுவலகம் ஒரு முக்கியப் பங்காற்றும்.

நமது நாட்டில், பாசிசத்திற்கான அபாயம் அச்சுறுத்தக்கூடிய வகையில் அதிகமாகத் தென்படுகிறது. மதப் பழமைவாதமும் மத அடிப் படைவாதமும் தங்களது அசிங்கமான முகத்தை கொடூரமாகக் காட்டிவருகின்றன. இந்த அபாயத்திற்கு எதிரான ஒட்டுமொத்த போராட்ட இயக்கத்தை நடத்துவதிலும் இந்த அலுவலகம் ஒரு முக்கியப் பங்காற்றும்.

புரட்சிகர அரசியலின் கருவானது அதன் உயர்ந்த அறநெறி மற்றும் ஒழுக்கநெறித் தரத்திலேதான் இருக்கிறது என்று தோழர் சிப்தாஸ் கோஷ் நமக்கு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார். குதிராம், பாகா ஜத்தின், பிரீத்தி லதா, பகத்சிங், அஸ்பஃகுல்லா கான் போன்ற குணசீலர்களை இந்த நாடு இனிமேலும் உருவாக்க முடியாதபடி, இந்த நாட்டுமக்களின், குறிப்பாக மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் ஒழுக்கநெறி முதுகெலும்பை முறித்து, மனித சாராம்சத்தையே அழிப்பதற்காக நமது நாட்டின் சுரண்டல் முதலாளித்துவ வர்க்கம் சதிசெய்து வருகிறது என்று அவர் எச்சரித்தார். அந்த அபாய கரமான தாக்குதல் நடைபெற்று வருகிறது. நாம் வேரற்றவர்களாக ஆக்கப்பட்டு வருகிறோம் என்று தோழர் சிப்தாஸ் கோஷ் கூறினார். எனவேதான் மறுமலர்ச்சிகால மற்றும் விடுதலைப் போராட்ட கால மாபெரும் முன்னோடிகளின் வாழ்க்கைப் போராட் டத்தைக் கற்றுணருங்கள், அதிலிருந்து மதிப்புமிக்க பாடங்களை எடுத்துக்கொள்ளுங்கள் என்று அவர் திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டார். அதே போன்று மற்ற நாடுகளின் மாபெரும் மனிதர்கள் மற்றும் புரட்சியாளர்களின் வாழ்க்கைப் போராட்டங் களிலிருந்து மதிப்புமிக்க பாடங்களைக் கற்றுணருங்கள்

தொடர்ச்சி 8ம் பக்கம்

## பர்த்வான் குண்டுவெடிப்புச் சம்பவம்

# தடுத்திருக்க வேண்டிய பொறுப்பு மத்திய, மாநில அரசாங்கங்கள் இரண்டுக்குமே உண்டு!

*மேற்குவங்கத்தின் பர்த்வான் மாவட்டத்திலுள்ள காக்ரகர் என்ற இடத்தில் நடந்த தீவிரவாத நடவடிக்கைகள் மற்றும் குண்டுவெடிப்புச் சம்பவத்தினைத் தொடர்ந்து நாட்டில் உருவாக்கப்பட்ட சூழ்நிலைமைகள் குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அக்டோபர் 22 அன்று ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தில் உரையாற்றினார். அந்த உரை இங்கு தரப்பட்டுள்ளது.*

பர்த்வான் மாவட்டத்தின் காக்ரகரில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து நாம் ஆழ்ந்த வருத்தமும் கவலையும் அடைகின்றோம். இந்த சம்பவத்திற்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். அதே நேரத்தில் மக்களின் பாதுகாப்பு குறித்த கேள்வியெழுகிறபோது மத்திய மாநில அரசாங்கங்கள் இரண்டுமே கூட்டு முன்முயற்சியில் ஈடுபட்டு இந்த சம்பவம் நடைபெறாமல் தடுக்க செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதற்கு நேர்மாறாக மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையே ஒரு பனிப்போர் நிகழ்ந்துவருகிறது. ஒருவரை ஒருவர் மாற்றி மாற்றிக் குறைசொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதில் மற்றொரு கேள்வியும் எழுகிறது. இந்த சம்பவத்திற்குக் காரணமானவர்கள் பங்ளா தேஷிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லப்படுவதாக எடுத்துக் கொண்டால் மக்கள் பணத்தை ஏராளமாக செலவுசெய்து உருவாக்கிப் பராமரிக்கப்படும் இந்த எல்லைப்பாதுகாப்புப்படை மற்றும் மத்திய மாநில உளவுத் துறையினர் என்னசெய்து கொண்டிருந்தார்கள்? இது குறித்து எந்தத் துப்பையும் உளவுத்துறையின் அதிகாரிகள் அறிந்திருக்கவில்லையே ஏன்? ஆக இந்த விஷயத்தில் மாநில மற்றும் மத்திய அரசாங்கங்கள் தங்களின் பொறுப்பை சரிவர செய்திருக்கவில்லை என்பதை அவர்கள் மறுக்கமுடியுமா?

மேலும் இவ்விஷயத்தில் நாம் சுட்டிக்காட்டிச் சொல்ல விரும்புவது என்னவெனில் குற்றவாளிகளைத்தேடிக் கண்டுபிடிப்பதற்குப்பதிலாக வகுப்புவாத உணர்வெழுச்சிகளை கிளர்த்திவிட்டு பெரிதாக்குவதற்காக முயற்சிகள் நடக்கின்றன என்பதைத்தான். தீவிரவாதிகள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் தீவிரவாதம் குற்றமே. அதற்காக, ஒட்டுமொத்த சிறுபான்மை சமூகமும் இதில் ஈடுபடுவதாக ஊகித்துக்கொள்வது மிகவும் தவறாகும். குஜராத் கலவரங்களையும் இனப் படுகொலைகளை மற்றும் பாபர் மசூதி இடிப்பில் ஈடுபட்டவர்கள் இந்துத்துவவெறி கொண்ட கலவரக்காரர்களே. அதற்கு அர்த்தம் ஒட்டமொத்த இந்து சமூகத்தவர்களும் இதில் ஈடுபட்டார்கள் என்பதா? இதைப்போலவே கோயில்கள், மசூதிகள், ரயில்களில் குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்ட பல்வேறு சம்பவங்களில் ராஜஸ்தானைச் சேர்ந்த பிரக்ய பாரதி, குஜராத்தைச் சேர்ந்த சுவாமி அசிமானந்தா போன்ற இந்துத்துவ தீவிரவாதிகளுக்கு இருக்கும் தொடர்பு விசாரணையில் வெளிவந்திருக்கிறது இதற்கு அர்த்தம் பெரும்பான்மை இந்துசமூகத்தவர்கள் அனைவரும் தீவிரவாதிகள் என்பதா? ஏதேனும் ஒரு மதரஸா– தீவிரவாதிகளால் பயன்படுத்தப்படுமானால் அனைத்து மதரஸாக்களும் தீவிரவாதத்தின் குகைகள் என்று அர்த்தம் கற்பிக்க முடியுமா? ஆசிரம வாழ்க்கை நடத்துகின்ற சன்யாசி என்று தன்னை அறிவித்துக் கொண்ட ஆசிராம்பாபு என்ற சாமியார் ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டதால் சிறையிலடைக்கப்பட்டார். ஆனால் அதற்காக எல்லா ஆசிரமங்களிலும் அவ்வாறுதான் நடக்கிறது என்று எடுத்துக் கொள்ளமுடியுமா? இது எந்தவொரு விஷயத்தையும் முடிவு செய்கின்ற சரியான வழிமுறையல்ல.

பங்களாதேஷ் முஸ்லீம்கள் முஸ்லீம் அரசை உருவாக்கவே இந்தியாவிற்குள் எல்லைதாண்டி நுழைகிறார்கள் என்ற பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்படுகிறது. ஆயிரக்கணக்கான பங்காள தேசத்தவர்கள் சில பத்தாண்டுகளுக்கு முன்புதான் இஸ்லாமிய பாகிஸ்தானை எதிர்த்து இரத்தம்சிந்தி தங்களுக்கான சுதந்திர பங்களாதேஷை கட்டமைத்தார்கள் என்பதை மறக்கமுடியுமா? இன்றும் கூட அவர்கள் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பான ஜமாதி இஸ்லாமியத்தை எதிர்த்து மிகத் தீவிரமாகப் போராடிவருகிறார்கள். அவ்வாறிருக்க, பங்களாதேஷிகள் ஜமாதி இஸ்லாமைப் பலப்படுத்துவதற்காக இந்த நாட்டிற்கு வருகிறார்கள் என்று பிரச்சாரம் செய்யப்படுவது சரியல்ல. இவ்வாறாக பலவித அபத்தமான பிரச்சாரங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. ஒரு நாட்டின் பிரஜை மற்றொரு நாட்டின் பிரஜையாக மாறுவதற்கு சர்வதேசச் சட்டங்கள் வகை செய்கின்றன. யாருக்கு குடியுரிமை கொடுப்பது கொடுக்கலாகாது என்பதை முடிவு செய்வது அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களின் பொறுப் பாகும். மற்றொருபுறத்தில், வறுமையில் பாதிக்கப் பட்டு அண்டைநாடுகளுக்கு ஏராளமானவர்கள் சட்டரீதியாகவும் சட்டவிரோதமாகவும் புலம் பெயர்வதும் நடைபெற்றுவருகிறது. லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து எண்ணற்றோர் அமெரிக்காவிற்குச் செல்கிறார்கள். நமது நாட்டிலிருந்து மத்திய கிழக்கு மற்றும் பிற நாடுகளுக்கு குடிபெயர்ந்து செல்கிறார்கள். அதேபோல பல நாடுகளிலிருந்தும் அநேகர் இந்தியாவிற்கு வருகிறார்கள். பங்களா தேஷிலிருந்தும் நேபாளிலிருந்தும் அநேகர் காலையில் இங்கே வந்து வேலைசெய்துவிட்டு மாலையில் சென்று விடுகிறார்கள். இம்மாதிரியான மக்களையெல்லாம் எவ்வித பாரபட்சமுமின்றி தீவிரவாதிகள் என்று அழைக்க முடியுமா? மாறாக அவர்கள் அனைவருக்கும் பணிபுரிவதற்கான அனுமதிச்சீட்டு வழங்கப்படவேண்டும்.




மத அடிப்படைவாதம் உலகம் முழுவதிலும் ஒரு பேரபாயமான சக்தியாக தற்போது எழுந்துநிற்கிறது. நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து ஜனநாயகத்தை நிறுவுவதற்காக தனது உதய காலத்தில் பூர்ஷுவாக்கள் மத அடிப்படைவாதத்தை எதிர்த்தும் மதச் சிந்தனைகளை எதிர்த்தும் போராடினார்கள். ஆனால் பிற்போக்குக் கட்டத்தை எட்டிவிட்ட பிறகு முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியைத் தடுத்து முறியடிப்பதற்காக மீண்டும் மத அடிப்படைவாதத்தை பூர்ஷுவாக்கள் புதுப்பித்துவருகிறார்கள். உலக சோசலிச முகாம் இருந்தது வரையில் ஏகாதிபத்தியத்திற் கெதிராகவும் முதலாளித்துவத்திற் கெதிராகவும் இயக்கங்கள் பல்வேறு நாடுகளில் எழுச்சிபெற்று வளர்ந்தன. ஆகவே மத அடிப்படைவாதம் தழைக்க இயலவில்லை. இன்று சோசலிச முகாம் இல்லாத நிலையில் பூர்ஷுவாக்கள் எல்லா அடிப்படைவாதத்தையும் குறிப்பாக இஸ்லாமிய அடிப்படைவாதத்தைத் தூபமிட்டு வளர்த்து வருகிறார்கள் அதன்மூலம் அதனை ஒரு பேரபாயமான கட்டத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒசாமா பின்லேடன், அல்கொய்தா, தலிபான், ஐஎஸ்ஐஎஸ், ஜமாதி இவையனைத்தும் யுஎஸ் ஏகாதிபத்தியத்தின் உருவாக்கங்களே. அவர்கள் உருவாக்கிய குட்டி பூதங்கள் இன்று இராட்சஷபூதங்களாக வடிவெடுத்து நிற்கின்றன.

நான் ஒரு மார்க்சியவாதி கடவுள் நம்பிக்கை இல்லாதவன் ஆனால், அனைத்து மத போதகர்களையும் நான் மதிக்கிறேன். ஏனெனில் அவர்கள், அவர்கள் வாழ்ந்த காலத்தின் அநீதிகளை எதிர்த்து முன்னேற்றத்திற்காகப் போராடி இருக்கிறார்கள். ஒருவேளை முகமது ஹசரத் தற்போது உயிரோடிருந்தால் தற்போது இஸ்லாம் என்ற பெயரில் ஆப்கானிஸ்தான், லிபியா, சிரியா மற்றும் பிற நாடுகளிலும் மற்றும் ஷியா, சன்னி பிரிவினர்களுக்கிடையே தூண்டிவிடப்படும் மோதல்கள் மற்றும் பெண்களைக் கடத்தி அவர்களை பாலியல் அடிமைகளாக பயன்படுத்துவது போன்ற நாசகரமான நடவடிக்கைகளைச் செய்யும் தீவிரவாதக் குழுக்களுக்கெதிராகத்தான் அவர் இருப்பார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அதைப்போலவே விவேகானந்தர் உயிரோடிருந்தால், இந்துமதம் என்றபெயரில் ஆர்எஸ்எஸ், பிஜேபி இந்த நாட்டில் செய்துவரும் செயல்களுக் கெதிராக நிச்சயம் குரல் எழுப்புவார். சைதன்யா, இராமகிருஷ்ணா, விவேகானந்தா இவர்கள் யாரும் இந்து இல்லையா? என்பதைத்தான் நாங்கள் கேட்டுவருகிறோம். ஆனால் அவர்கள் ஒருபோதும் பாபர் மசூதியை இடிக்கவும் அவ்விடத்தில் ராமர் கோயிலைக் கட்டவும் அழைப்பு விடுக்கவில்லையே அவர்கள் அவ்வாறு அழைப்பு விடுக்கவில்லை என்பதால் அவர்கள் கோழைகளாக இருந்தார்கள் என்று அர்த்தமா? இராமகிருஷ்ண பரமஹம்சர் மசூதியில் தொழுகைகளில்கூட பங்கெடுத்துக் கொண்டார். நான் விவேகானந்தரின் எழுத்துக்கள் சிலவற்றை உங்களுக்குப் படித்துக்காட்ட விரும்புகிறேன். அவர் "என்னைப் பொறுத்த வரையில் மதங்கள் அனைத்தும் சமமானவைகளே நான் அனைத்து மதங்களையும் சமமாகவே மதிக்கிறேன்" என்றார். அவர் மேலும் ஒருபடி முன்னே சென்று "எனக்கொரு மகன் இருந்தால், சில மந்திரங்களை கவனக்குவிப்போடு பிரார்த்தனை செய்யும் பயிற்சியைத் தவிர்த்து வேறு எந்த மதப் பாரம்பரியத் தொடர்ச்சியையும் நான் அவனுக்கு வழங்க மாட்டேன் அவன் வயதில் பெரியவனாக வளரும் போது பல்வேறுபட்ட கருத்துக்களையும் அறிவுரை களையும் கவனித்து அறிந்து கொண்டு பின் அவனுக்கு எது உண்மையென்றுபடுகிறதோ அதனை அவன் கைக் கொள்ளும்படியாக நான் விட்டுவிடுவேன். இயல்பான வளர்ச்சிப்போக்கில் முழுசுதந்திரத்தோடு எவ்வித முரண்பாடுமின்றி என் மகன் ஒரு புத்தமதத்தைச் சேர்ந்தவனாகவும் என் மனைவி ஒரு கிருஸ்த்து வாகவும், நான் ஒரு முஸ்லீமாகவும் ஆக முடியும்" என்கிறார். இப்போது ஆர்எஸ்எஸ் தலைவர்கள் சொல்லட்டும் விவேகானந்தர் இந்துவா இல்லையா என்று?

மேற்குவங்கத்திற்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறது. இந்த மாநிலம் இந்திய சுதந்திர இயக்கத்தின் மையப்புள்ளியாகத் திகழ்ந்தது. நமது சுதந்திர இயக்கத்தின் புரட்சிவாதமும் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் செல்வாக்கிற்குட்பட்ட இடதுசாரி வாதமும் இங்கே இருந்துவந்தது. வகுப்புவாத சக்திகள் அவ்வளவாக இங்கே தலைதூக்க முடியாமல் இருந்தது. ராம்மோகன்ராய் சமஸ்கிருதக் கல்விமுறைக்குப்பதிலாக மேற்கத்திய கல்வியைக் கொண்டுவர வலியுறுத்தினார். வேதாந்தக் கல்விக்குப்பதிலாக விஞ்ஞானப்பூர்வ கல்வியை வலியுறுத்தினார். வேதமும் வேதாந்தமும் உண்மைக்குப் புறம்பான தத்துவமுறைகள் என்றார் வித்யாசாகர். இயற்கைத் தத்துவமும் விஞ்ஞானமுமே அவசியம் என்றார். அந்தப் பாரம்பரியத்தைக் காலிலிட்டு மிதித்துவிட்டு ஆர்எஸ்எஸ் நாட்டை வேத காலத்திற்கு இழுத்துச் செல்கிறது. கிட்டத்தட்ட வேதங்கள் அனைத்தும் இருந்ததைப்போல காட்டமுற்படுகிறது. இனிமேல் பாராளுமன்ற ஜனநாயகம், சார்பியல் தத்துவம் குவான்டம் மெக்கானிக்ஸ் அனைத்தும் வேதத்தில் இருந்தது என்றும் அவர்கள் சொல்லக்கூடும்.

இரவீந்திரநாத், சரத்சந்திரா, நஸ்ரூல் ஆகிய அனைவரும் மதத்தை அரசியலுடன் கலப்பதற்கு எதிராக நின்றனர். சுபாஷ் சந்திரபோஸ் இதுகுறித்து என்ன குறிப்பிட்டார் என்பதை உங்களுக்குப் படித்துக்காட்டவிரும்புகிறேன். " இந்து மகாசபா துறவிகளையும் பெண் சன்னியாசிகளையும் கையில் சூலாயுதத்துடன் வாக்குச் சேகரிக்க அனுப்புகிறது. கையில் சூலாயுதத்தையும் காவியுடையையும் பார்த்தவுடனேயே ஒவ்வொரு இந்துவும் தலைகுனிந்து வணங்குகிறார்கள் இதைப்பயன்படுத்தி இந்து மகாசபா அரசியலில் மேல்நிலைக்கு வருகிறது. மதத்தை கறைபடுத்துகிறது..... இந்தத் துரோகிகளை தேசிய அரசியலிலிருந்து தனிமைப்படுத்துங்கள் அவர்கள் சொல்வதைக் காதுகொடுத்தும் கேட்காதீர்கள் சுதந்திரத்தை நேசிக்கின்ற இந்த நாட்டின் ஆணும் பெண்ணும் மிகுந்த நெருக்கத் துடனும் ஒற்றுமையுடனும் இந்த நாட்டிற்குச் சேவையாற்றுவதை நாம் விரும்புகிறோம். இந்துக்கள் பெரும்பான்மையாக இரு ப்பதால், 'இந்துராஜ்ஜியம்' என்று முழங்குவது இவையெல்லாம் உண்மைக்குப்புறம்பான மற்றும் ஒன்றுக்கும் உதவாத சிந்தனைகள். இந்துக்களின் நலன் வேறு முஸ்லீம்களின் நலன் வேறு என்று பேசுவதைப்போல மிக மோசமான தவறு வேறொன்றும் இருக்கமுடியாது. வெள்ளம், பஞ்சம், தொற்றுநோய் இன்னும் பிறயாவும் அப்படித்தான்.... அது ஒருவரையும் விட்டுவைக்காது இம்மாதிரியான எண்ணம் கொண்ட சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் பலரின் சிந்தனைகளின் தாக்கத்தினால்தான் சியம பிரசாத் முகர்ஜி போன்ற நபரால்கூட வங்காளத்தில்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# மோடிபெற்ற வெற்றியின் விலை என்ன? அதைத் தரப்போவது யார்?

பூர்ஷுவா பாராளுமன்றத் தேர்தல் அரசியலில் பணம் எவ்வாறெல்லாம் ஆதிக்கம் செலுத்துகிறது என்பது அனைவருக்கும்தெரியும். ஆனால் இவ்வளவு பெரிய தொகை சம்பந்தப் பட்டிருக்குமா? என்று ஆச்சரியப்படத்தக்க வகையில் சமீபத்தில் (அக்.11,2014) ஒரு செய்தி ஸ்டேட்ஸ்மென் பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக வெளிவந்தது. "மோடி கலந்துகொள்ளும் ஒரு கூட்டத்தின் விலை ரூ1.04 கோடி" என்றது அந்தச்செய்தி. நரேந்திரமோடி பிப்ரவரி மாதம் 8ம் தேதி இம்பாலில் கலந்து கொண்ட ஒரு தேர்தல் பேரணியின் செலவுகளை விரிவாக விவரிக்கும் ஆவணம் ஒன்றைக் கைப்பற்றியபிறகு அந்தப் பத்திரிகை அந்தச் செய்தியை வெளியிட்டது. இந்தப் பயமுறுத்தும் தொகை, நரேந்திரமோடி கலந்து கொண்ட கூட்டத்திற்கான தொகைகூட அல்ல. மேலும் லோக்சபா தேர்தலுக்கு முன்பு அவர் 437 மிகப்பெரும் பேரணிகளை நடத்தியிருக்கிறார். ( இந்த எண்ணிக்கை பிஜேபியின் தலைவர் அமித்ஷா சொன்னதாகக் கூறப்பட்டது) ஒட்டுமொத்தத்தில் மோடி 5,827 பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. மேற்கண்ட செய்திகள் சில தெளிவான கேள்விகளை நம்முன் எழுப்புகின்றது. இம்பாலில் நடந்த மோடியின் பேரணிக்கு செலவிடப்பட்ட தொகை ரூ 1 கோடி என்றால் மோடி கலந்துகொண்ட 5,827 பொது நிகழ்ச்சிகளுக்கு பிஜேபி எவ்வளவு பெரிய தொகை செலவு செய்திருக்கும்? அப்படியானால் பிற தலைவர்கள் கலந்து கொண்ட தேர்தல் கூட்டங் களுக்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கும்?

மேலும் தற்பொழுது நடந்துமுடிந்த பல்வேறு சட்டமன்றத் தேர்தல்களிலும் திரு மோடியின் இந்த பிரதாபங்கள் தொடர்ந்தன. தற்பொழுது பிரதமர் மோடி அடுக்கடுக்காக பல பேரணிகளை நடத்திக் கொண்டிருக்கிறார். இந்தமுறை (அக். 10, 2014) டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை மகாராஷ்டிரா சட்டமன்றத் தேர்தல் குறித்து மும்பையில் நடந்த மற்றொரு குறிப்பிட்ட அம்சத்தைச் சுட்டிக்காட்டி ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. உதாரணத்திற்கு பல்வேறு கட்சிகள் பெருமளவில் தேர்தல் காலத்தில் வீட்டுவேலைகளுக்காகவும், வாகனம் ஓட்டுவதற் காகவும், தேர்தல் பிரச்சார வேலைகளுக்காகவும் வேலையாட்களை நியமித்துக் கொண்டன என்பது அந்த செய்தி. அவர்களுக்குக் குறைந்தது ரூ300லிருந்து ரூ1000ம் வரை (இரண்டு வேளை உணவுடன்) அதாவது அந்தந்த வட்டாரங்களைப் பொறுத்து சம்பளம் தரப்பட்டது. தேர்தல் வேலை என்பதில் கூட்டங்களில் கலந்து கொள்வது, பொதுக் கூட்ட மேடையமைப்பது, வாக்காளர் சீட்டுகளை விநியோகம் செய்வது இது போன்ற இன்னபிற வேலைகளும் அடங்கும். சம்பளம் மணிக் கணக்கிலும் நாட்கணக்கிலும் வேலை அடிப்படையிலும் வழங்கப்பட்டது.

பல்வேறு வடிவங்களில், உத்திகளில் வாக்காளர் களைத் தூண்டிவிட்டு வாக்குகளைப் பெறுவது பூர்ஷுவா பாராளுமன்றத் தேர்தல் அரசியலோடு இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று என்பது அனை வரும் அறிந்த ரகசியம். ஆனால், பிஜேபியின் மத்திய அமைச்சர் நிதின்கட்கரி, மகாராஷ்டிரா சட்டசபைத் தேர்தலுக்கு முன்பு மக்களுக்கு வழங்கிய அறிவுரையில் மக்கள் அனைவரும் பிற கட்சியின் வேட்பாளர்கள் ஓட்டுக்காகத் தருகின்ற 'லஞ்சப்பணத்தை' மறுக்காமல் பெற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் பிஜேபிக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்று ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார். இவரின் இந்த அறிவுரை வேட்பாளர்களுக்கு மத்தியில் ஓட்டுகளை விலைக்கு வாங்குவதற்கான போட்டிக்கு எப்படி வழிவகுத்தது என்று கிண்டல் செய்து பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது. அதன் பிறகு மிக விரைவில் ஓட்டின் விலை கங்காங்கேட் தொகுதியில் ரூ900க்கும், போஷாரியில் ரூ1500க்கும், ஔரங்காபாத்தில் ரூ 2000க்கும் உயர்ந்ததாக செய்திபரவியது.

நாம் மேற்கண்ட செய்திகள் அனைத்தும் தேர்தல் களில் எந்த அளவிற்குப் பணம் விளையாடுகிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும். அதேநேரத்தில் எங்கிருந்து எப்படி இவ்வளவு இப்படி வாரியிறைக்கப்படுகிறது? என்ற கேள்வி இன்னமும் பதிலுக்காகக் காத்திருக்கிறது. வார்த்தகக் குழுமங்கள் பூர்ஷுவா அரசியல் கட்சிகளின் தேர்தல் செலவுக்கு நிதியளிப்பது நன்கறிந்த நீண்டகால நடைமுறையாகும். ஆனால் அவர்கள் எந்த அளவிற்கு அவ்வாறு நிதியளிக்கிறார்கள் மற்றும் தங்களின் வர்க்க நலனுக்கும், வர்த்தக நலனுக்கும் எந்தக் கட்சி அல்லது கட்சிகள் மிக ஏற்றவகையில் சேவைசெய்யும் என்று அவர்கள் எண்ணுகிறார்களோ அந்தக் கட்சிக்கு எந்த அளவிற்கு அவர்கள் நிதியளிப்பார்கள் என்ற விஷயம் மக்களின் கண்களிலிருந்து பெரும்பாலும் மறைக்கப்பட்டுவருகிறது. ஏனெனில் இதில் கறுப்புப் பணம் கைமாறுவதும் நடைபெறுகிறது. ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் நரேந்திர மோடியை பிரதமர் வேட்பாளராக மிகப் பிரமாண்டமாக முன்நிறுத்தி அவருக்கு மிகப்பெரிய மக்களாதரவு இருப்பதைப்போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதற்காக முன்னெப்போதும் நாம் கண்டிராத அளவிற்கு கார்ப்பொரேட் வியாபாரக் குழுமங்கள் தங்களின் பணப் பையை அகலமாகத் திறந்தார்கள் என்பது மிகத் தெள்ளத் தெளிவாகத் தெரியவந்தது. எவ்வளவு அளவுக்கதிகமான பணம் வாரியிறைக்கப்பட்டது, அவர் கலந்து கொண்ட பேரணிகள் எப்படி மிக நேர்த்தியாக பிரம்மாண்ட மாகத் திட்டமிடப்பட்டன மற்றும் எவ்வளவு கவனத்துடன் பிஜேபிக்குள் மோடியின் மூத்த தலைவர்கள் மோடியை ஏற்றுக் கொள்ளும் அளவிற்குச் சரிகட்டப்பட்டார்கள், இந்தப் பிரச்சாரங்கள் அனைத்தும் மிகத் திட்டவட்டமாக கார்ப்பொரேட் குழுமங்களால் திட்டமிடப்பட்டு செய்யப்பட்டவைகளாகும். அந்தப் பிரச்சாரம்தான் மோடியை அதிகாரத்தில் கொண்டுவந்து அமர்த்தி யிருக்கிறது. ஆனால், இந்த கார்ப்பொரேட் குழுமங்கள் வெறுமனே மோடியின் மீதிருந்த அன்பின் காரணமாகவா இவ்வளவு பணத்தைச் செலவு செய்தார்கள்? இல்லை. மாறாக மோடி பிரதமராவதன் மூலம் தங்களின் நலன் மிகச் சிறந்தமுறையில் கவனிக்கப்படும் நிறைவேற்றப் படும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். மேலும் அவர்கள் செய்த முதலீடு நல்ல லாபத்துடன் அவர்களுக்குத் திரும்பக் கிடைக்கவேண்டும் என விரும்புவர்.

இவையனைத்திற்கும் பிரதிபலனாக மோடி கார்ப்பொரேட் ஆதரவு சீர்திருத்தங்களைச் செய்வதாக உறுதியளித்தார். மேலும் மேலும் தனியார்மயமாக்குவதும் அதில் அடங்கும். தற்பொழுது மோடி அரசாங்கம் தன்னை ஏழை களுக்குச் சாதகமான அரசாங்கமென்றும் அதே நேரத்தில் கார்ப்பொரேட் வர்த்தகக் குழுமங்களுக்கும் ஆதரவான அரசாங்கமென்றும் அழைத்துக் கொள்கிறது. அவ்வாறு அழைத்துக் கொள்வதில் எவ்விதப் பிரச்சினையும் இருப்பதாக அது கருதவில்லை. ஆனால் இது எப்படி சாத்தியம்? மோடி அரசாங்கம் பதவிக்கு வந்த உடனேயே அது இரயில் கட்டணங்களை உயர்த்தியது. பயணிகள் கட்டணம் 14.2 சதமும் சரக்குக் கட்டணம் 6.3 சதமும் உயர்த்தப்பட்டது. அதே நேரத்தில் சீசன் டிக்கட்டுகளுக்கு இருமடங்கு கட்டண உயர்வை அறிவித்தது. நிதிப்பற்றாக்குறை என்று சாக்குச் சொல்லி தட்கல் முறையின் கீழ் தொடர்ந்து டிக்கெட் கட்டணத்தை உயர்த்திவருகிறது. ஆனால், வியாபாரிகளும் பணக்காரர்களும் மட்டுமே பயணம் செய்ய ஏதுவான வகையில் முன்மொழியப் பட்ட குஜராத்துக்கும் மகாராஷ்டிராவுக்கும் இடையிலான புல்லட் இரயில் திட்டத்திற்கு மட்டும் ரூ9லட்சம் கோடி என்ற மிகப் பெரும் தொகை ஒதுக்கீடு செய்வதில் நிதிப்பற்றாக்குறை குறுக்கே வரவில்லை. இரயில்வேயிலும் நேரடி அன்னிய முதலீடு வரவேற்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் எவ்விதத்திலாவது ஏழை மக்களின் நலன் கொண்டது என்று கருதமுடியுமா? மற்றும் பயணிகளுக்கான சௌகரியங்களை மேம் படுத்துவது தொடர்பாகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் ஏதொன்றும் நிறைவேற்றப்படுவதை நம்மால் காணமுடியவில்லை.

ஆனால் எவ்விதத் தாமதமுமின்றி அவர் முதலாளி களின் வியாபார நலன்சார்ந்த சீர்திருத்தங்களில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முன் முயற்சிகளைகளைத் துவக்கிவிட்டார். அதில் ஒன்றுக்குப்பின் ஒன்றாக நடவடிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. இவ்வாறாக மோடி அரசாங்கம் மருந்துகளின் விலைநிர்ணயத்திலிருந்த அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை ஏற்கனவே தளர்த்திவிட்டது. இதனால் வெறிநாய் கடி சிகிச்சைக்கான ஊசி மருந்தின் விலை முன்பு ரூ2,500 ஆக இருந்தது தற்போது ரூ7,500 ஆக ஏறிவிட்டது. புற்றுநோய் சிகிச்சைக்கான ஒரு குறிப்பிட்ட மருந்து ரூ 8,500க்கு கிடைத்துவந்த நிலைமாறி தற்போது அது 1 லட்சம் ரூபாய் என்ற அளவிற்கு அபாயகரமாக உயர்ந்திருக்கிறது. இதற்கு முன்பும்கூட பல்வேறு விதமாக நிபந்தனைகள் மருத்துவ நிறுவனங்களால் மீறப்பட்டு வந்தன என்பது வேறு விஷயம். ஆனால் தற்போது ஒட்டு மொத்தமாக மருந்துப் பொருட்களின் மீதான அரசின் கட்டுப்பாடுகள் அனைத்தையும் தளர்த்திவிடுவது லாபப் பெரும்பசிகொண்ட கார்ப்பொரேட்களின் கைகளில் மக்களை நிராயுதபாணியாக விட்டு விடுவதற்குச் சமமாகும். மக்களின் ஆரோக்கியத் தையும் அவர்களின் பொருளாதார வாழ்க்கை யையும் மிகுந்த இன்னலுக்குள் தள்ளிவிடும் இந்த நடவடிக்கைகளை எப்படி ஏழை மக்கள் நல நடவடிக் கைகள் என்று கூற முடியும்? மேலும், டீசல் விலை நிர்ணயத்தில் இருந்துவந்த கட்டுப்பாட்டையும் தளர்த்தி தனியார் மற்றும் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் தடையின்றி விலைகளை உயர்த்திக் கொள்ள கதவுகளை அகலத் திறந்து விட்டுள்ளதையும் நாம் கண்டுவருகிறோம். தற்போது இயற்கை எரிவாயுவின் விலைகளை ஒரே தவணையில் 33 சதம் உயர்த்தியது மேன்மேலும் அத்தியாவசியப் பொருட்கள் விலையுயர்விற்கும் போக்குவரத்து, மின்கட்டணங்கள் உயர்வதற்கும் வழிவகுக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அதற்கேற்றாற்போல் மோடி அரசாங்கம் நூறுநாள் வேலைத் திட்டத்தை 200 மாவட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று குறுக்கம் செய்து அறிவித்துள்ளது.

இவையனைத்தும் இதுவரையில் மோடி அரசாங்கம் அறிவித்துள்ள நடவடிக்கைகளின் ஒரு சிறு பகுதிமட்டுமே. அதே போல, முதலாளிகளுக்கான சீர்திருத்த நடவடிக்கைகள் என இதுவரை அறிவிக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் பலவாகும். அவற்றில் பொதுத்துறைப் பங்குகளைத் தனியாருக்கு விற்றல், இன்சூரன்ஸ் மற்றும் இராணுவத்தில் நேரடி அன்னிய முதலீட்டை அனுமதித்தல் அடுத்ததாக தொழிலாளர் சீர்திருத்தங்கள்—இதில் குறைந்தபட்சம் மிச்சசொச்சங் களாக இருந்துவந்த தொழிலாளர்களுக்கான ஜனநாயக உரிமைகளான கூட்டுபேர உரிமை முதலான பலவற்றை வேரோடு களைந்தெறிய குறிவைக்கிறது. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் கார்ப்பொரேட் குழுமங்களால் வெகுவாக வரவேற்கப்படுகின்றது. மோடியை கார்ப்பொரேட் குழுமங்கள் மிகவும் விரும்புவதில் ஆச்சரியமென்ன? இவ்வாறாக அவர் மிகத் திறமையுடன் முதலாளிகள் சந்திக்கும் இடர்பாடுகளைக் களைந்து அவர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்று அவர்களின் தங்கு தடையற்ற சுரண்டலைத் தொடர்வதற்கும் அதிகபட்ச லாபமீட்டுவதற்கும் வழியமைத்து நியாயப்பூர்வமான அரசாங்கத்தின் குறுக்கீடு களையும் நிபந்தனை களையும் கூட அவர் இல்லாமல் செய்துவிட்டார்.

இப்போதும் நாம் அனைவருக்கும் எழும் கேள்வி என்னவெனில், தங்குதடையற்ற தனியார்மய மாக்கலின் காரணமாக கற்பனைக்கு எட்டாத வகையில் அதிகரிக்கும் கார்ப்பொரேட் குழுமங்களின் வருமானத்தில் ஒரு சிறு பகுதி முன்னுரிமை பெற்ற மேலாண்மை வேலை செய்கின்ற பகுதியினர்மட்டும் தங்களின் வருமானத்தை கணிசமாக அதிகரித்துக் கொள்ளும் நிலைமை உருவாகியிருக்கும் பொழுது, மறுபுறத்தில் மக்களின் நிலை மிகுந்த துன்பம் நிறைந்ததாக மாறிவருவதன் காரணமாக பெரும் எண்ணிக்கையில் விவசாயிகள் தற்கொலைக்குத் தள்ளப்படுவதும் சமூக மோதல்களும் அதிகமாகி வருகின்றன. இந்த நிலைமையில் இவர்கள் புதிதாக அறிவித்திருக்கும் முதலாளிகளின் வியாபார நலன்களுக்கு ஆதரவான சீர்திருத்தங்கள் அவர்களை மேலும் என்ன கொடுமையான நிலைக்குக் கொண்டு செல்லுமோ? என்பதுதான்.

உண்மையில் 'அச்சே தின்' (நல்லகாலம்) என்பது கார்ப்பொரேட் வர்த்தகக் குழுமங்களுக்குத்தான் வந்திருக்கிறது. ஆகவேதான் அவர்கள் மோடி அரசாங்கம் பதவிக்குவருவதற்கு மிக அதிகமாகச் செலவு செய்தார்கள். ஆனால் பாடுபடும் மக்களுக்கு இருண்டகாலம் காத்திருக்கிறது. அவர்கள்தான் அதற்கான விலையைத் தரவேண்டியிருக்கிறது. அவர்கள் தலையில்தான் அது விடியப்போகிறது. என்னென்ன விலையை அவர்கள் தரவேண்டும் என்பதை அறிந்து மக்கள் அதிலிருந்து வெளிவரும் வழியை தெரிந்து கொள்ளும் வரையில் அவர்கள் அதிலிருந்து வெளிவரஇயலாது.

# மைக்கேல் பிரௌனுடைய கொடூரக் கொலையும் அமெரிக்காவின் பொய்முகமும்

வெளிநாடுகளுக்கு ஜனநாயகத்தை ஏற்றுமதி செய்வதிலும் உலகமுழுமைக்குமான பாதுகாவலன் நானே என்று தன்னைத்தானே ஆணவத்துடன் அறிவித்துக்கொண்டிருக்கும் யுஎஸ் நிர்வாகம் எவ்வாறு நாகரீகத்துடனும் ஜனநாயகத்துடனும் திகழ்கிறது என்பதற்கான சாட்சியத்தை இந்த உலகம் மீண்டுமொருமுறை கண்ணுற்றுவருகிறது. **ஆகஸ்ட் 9, 2014** அன்று ஃபர்குசன் நகரத்தின் டேரன் வில்சன் என்ற போலீஸ் அதிகாரி மைக்கேல் பிரௌன் என்ற 18வயதான நிராயுதபாணி கருப்பின சிறுவனை சுட்டுக்கொன்றார்.

அச்சிறுவன் சரணடைய முயலும்போது கொல்லப்பட்டான் என கண்ணால்கண்ட சாட்சியங்கள் கூறும்போது, அதிகாரி வில்சன் சுடுவதற்குமுன்பு அச்சிறுவன் அவரை தாக்கினான் எனவும் அவன் ஒரு கொள்ளையில் ஈடுபட்ட ஒரு சந்தேகத்திற்குரிய குற்றவாளி எனவும் போலீஸ் கூறியது. ஆனால், ஒரு அபார்ட்மெண்ட் வளாகத்திற்கு முன்பாக பட்டப்பகலில் பிரௌனை வில்சன் சுட்டுக்கொன்றிருக்கிறார் என இதுவரை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. உற்சாகமாக நடந்து சென்றான் நடந்துசென்றான் என்பதற்காக பிரௌனை வில்சன் நிறுத்தினாரே தவிர ஆயுதம் வைத்திருந்தான் என்பதற்காக அல்ல, மேலும் சம்பவம் நடந்த இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட தோட்டாக் குப்பிகள் அனைத்தும் வில்சன் துப்பாக்கியிலிருந்து வந்தவைகளே ஆகும்.

பிரௌன் கொல்லப்பட்டபின்பு ஃபர்குசனின் புறநகர் பகுதிகளில் வன்முறைப் போராட்டங்கள் வெடித்தது, அமெரிக்காவில் இனங்களுக் கிடையிலான உறவுகளின் நிலை குறித்து உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. இந்தப் பயங்கர கொலைக்கு எதிராகவும் மைக்கேல் பிரௌனின் குடும்பம் மற்றும் ஃபர்குசன் சமூகத்திற்கு தங்களது சகோதர உணர்வை வெளிப்படுத்தும் வகையிலும் **ஆகஸ்ட் 14** அன்று அமெரிக்காவின் குறைந்தபட்சம் **90** நகரங்களில் போராட்டங்கள் வெடித்துள்ளது. **ஆகஸ்ட் 10** ஆம் தேதி முதல் ஃபர்குசன் போலீஸ் ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது. பிரௌன் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து எழுந்த எழுச்சியானது, தேசிய–சர்வதேசிய கவனத்தை ஈர்த்து, ஊடகங்களின் மூலம், ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் **67** சதவீதத்தினரைக் கொண்ட ஃபர்குசன் நகரமானது வெள்ளையர்களை அதிகமாகக் கொண்ட போலீஸ் துறையால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது. என்ற செய்தி வெளி வந்துள்ளது. **53** போலீஸ் அதிகாரிகளில் மூவர் மட்டுமே ஆப்பிரிக்க–அமெரிக்கர்கள். மேலும் தற்போதைய ஃபர்குசனின் தலைமை அதிகாரி தாமஸ் ஜாக்சன் ஒரு வெள்ளையர்.

இனவேறுபாடுகளை பாராட்டாத நாடு என்று சொல்லப்படும் அமெரிக்காவில் நடந்த இந்நிகழ்வு அரிதான ஒன்றல்ல. சிறுபான்மை இனத்திற் கெதிரான இனப்படுகொலை மற்றும் போலீஸ் கொடுமைகளை எதிர்த்து நீண்டகாலமாக போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு ஃபர்குசனில் நடந்த மைக்கேல் பிரௌனின் இந்த கொலையானது இனப்படுகொலை வரலாற்றில் மற்றுமொரு நிகழ்வாகும். ஒரு போலீஸ் அதிகாரி, பாதுகாப்பு படையினர் அல்லது அதிகாரத்தை நாங்களே கையில் எடுத்துக் கொண்டவர்கள் (இவர்களெல்லாம் சற்றேரக்குறைய வெள்ளையர்கள்). ஒவ்வொரு **28**மணி நேரத்திற்கும் சராசரியாக ஒரு கருப்பின அமெரிக்க குடிமகன் கொல்லப்படுவதாக மால்காம் கிராஸ்ரூட்ஸ் இயக்கத்தினர் கணக்கிட்டுச் சொல்கிறார்கள். வட்டார, நாட்டுப்புற மற்றும் அரசு போலீஸால் இன்னும் செய்யப்படுகிற கருப்பினப் படுகொலைகளின் ஒரு சங்கிலித் தொடரில் மைக்கேல் பிரௌன் ஒரு துயரமான தொடர்பாவார். கடும் இனவாத பிரிவினை மற்றும் கொடூர இன சமத்துவமின்மையின் பின்னணியில் இந்தப் படுகொலைகள் நடக்கின்றன. அதாவது கருப்பின குடும்பத்தினரின் சராசரி சொத்தைவிட வெள்ளை குடும்பத்தினரின் சராசரி சொத்து **22**மடங்கு அதிகமாகும். **40** ஆண்டுகாலமாக நடக்கும் இனவெறுப்பு மற்றும் கிரிமினல் முத்திரை குத்துதல் போன்ற பிரச்சாரத்தின் பின்னணியில்தான் இந்த படுகொலைகள் நடக்கின்றன. தேசத்தின் **2.4** மில்லியன் கைதிகளில் **40** சதத்திற்கும் மேலானோர் கருப்பர்கள். கிரிமினல் என்று முத்திரை குத்தப்பட்டு அல்லது கைதுசெய்யப்பட்டு மூன்றில் ஒரு வயதுவந்த ஆண் தம் வாழ்வே முடமாக்கப்பட்டு இருக்கின்றனர். அவமானக் குறியைச் சுமக்கின்றனர்.

போலீஸை இராணுவமயமாக்குதல், பொது மக்களின்பால் பகைமைகொள்ளும் மனோ நிலையை பெறும் வகையிலான போலீஸ் பயிற்சி ஆகியவை மைக்கேல் பிரௌன் கொலையில் பிரதிபலிக்கிறது. பொதுமக்கள் மிரட்டல் விடுபவராகவும் மக்கள் மீதான வன்முறையே ஃபர்குசன் நிகழ்வின்போது யுஎஸ்ஸின் ஊடகங்கள் உள்ளூர் போலீஸ் ராணுவமயமாக்கப்பட்டதை முன்னிறுத்தியது பத்தாண்டுகாலமாக இனமயப் படுத்தவதும் நடந்துவருகிறது. இந்தக் கொலையை நியாயப்படுத்தும் போலீஸாரின் வாதங்கள் குறித்து பெரும்பான்மை வெள்ளை அமெரிக்கர்கள் மன நிறைவு தெரிவித்திருப்பதாக கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. எதிர்ப்பாளர்களுக்கு எதிரான வாதங்களுடன் கொலையை நியாயப் படுத்தும் போலீஸின் கருத்துக்கள் இண்டர்நெட்டில் உலாவிடப்பட்டன. போலீஸின் சமாதானங்கள் நம்பும்படியாக இல்லை என கூறுபவர்களை 'ஜுரிகளின் (நடுவர்குழு) தீர்ப்பு வருவதற்கு முன்பே முடிவுக்கு வருகிறார்கள்' என அவர்கள் மீது குற்றஞ்சாட்டினர். போலீஸுக்கு சாதகமாக முடிவுசெய்பவர்களை 'உண்மையான அமெரிக்கர்கள்' என பாராட்டுக்கள் வழங்கினர்.

ஒவ்வொரு வருடமும் **500**க்கு மேற்பட்ட அமெரிக்கர்களை போலீஸார் கொலை செய்வதாக தகவல்கள் கூறுகின்றன. கொலை செய்யப்பட்ட அமெரிக்கர்களில் வெகுசிலரே போலீஸாருக்கு அபாயமாகத் திகழ்ந்தவர்கள் ஆவர். அமெரிக்கர் களை போலீஸார் கொலை செய்ததற்கான காரணங்கள் நம்பும்படியாக இல்லை. உதாரணத்திற்கு ஃபர்குசானில் மைக்கேல் பிரௌன் கொலை செய்யப்பட்டதற்கு சில நாட்களுக்கு முன்பு ஜான்குரோபோர்டு வால்மார்ட் கடையில் ஒரு பொம்மைத் துப்பாக்கியை கையில் எடுத்ததற்காக போலீஸ் குண்டர்களால் அவ்விடத்திலேயே சுட்டுவீழ்த்தப்பட்டான். மைக்கேல் பிரௌன் கொலையில் ரத்தவெறி கொண்டவர்கள் திருப்தியடையவில்லை போலும். ஃபர்குசானிலிருந்து **4** மைல்களுக்கும் குறைவான இடத்தில் ஆகஸ்ட் **19**ம் தேதி மற்றொரு கருப்பர் போலீஸ் குண்டர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். கொலையின் வீடியோவானது "அச்சுறுத்தல்" என்ற போலீஸாரின் வாதங்களை பொய்யென நிரூபித்தது. பொதுமக்களுக்கு ஒரு மிகப்பெரிய அபாயமானதாக போலீஸ் இருக்கிறது. சுதந்திரமானவர்களின் நாடான அமெரிக்காவானது ஒரு நாஸி இராணுவ அரசைப்போல் காட்சியளிக்கிறது.

போலீஸாரிடமிருந்து விடுபட்ட ஒரு தன்னிச்சை யான குடிமக்கள் புலனாய்வுக் கமிட்டியை அதுவும் கருப்பின மக்களால் தாம் விரும்புபவர்களைக் கொண்டு தேர்ந்தெடுத்து அமைக்கப்பட்ட கமிட்டி யினால் புலனாய்வு மேற்கொள்ளப்படும் என்று போலீஸ் தலைமை, மேயர் அல்லது கவர்னர் அறிவித்திருந்தாலே ஃபர்குசானில் வெகுஜனப் போராட்டத்தையும் கொள்ளையையும் தடுத் திருக்கலாம். மாறாக மைக்கேல் பிரௌனை கொலைசெய்த போலீஸ் அதிகாரியின் பெயரை அறிவிக்க பலநாட்களாக மறுக்கப்பட்டதுடன் மைக்கேல் பிரௌனை கொலை செய்ததை நியாயப் படுத்துவதாகக் கருதி ஒருவர் ஒரு கடையில் சிகரெட் எடுக்கும் ஒரு வீடியோ படத்தை வெளியிட்டு அதிலிருப்பவர் மைக்கேல் என்று பரப்பப்பட்டது. இத்தகைய வெளியீடுகளும் போலீஸ் மற்றும் அரசாங்கத்தின் பல்வேறு முட்டாள்தனமான வெளியீடுகளும் கருப்பின மக்கள் தாம் ஏற்கனவே அறிந்ததைப்போல ஒரு மூடிமறைத்தல் நடக்கும் என்பதை அவர்களை நம்பவைத்தது.

மக்களை பிரித்துவைக்க யுஎஸ் ஆட்சியாளர்கள் இனவாதத்தை பயன்படுத்துவதை இச்சம்பவம் மீண்டுமொருமுறை உலகிற்கு காட்டியுள்ளது. 'ஜனநாயக' யுஎஸ்ஸில் கருப்பின மக்கள் எவ்வாறு பாரபட்சப்படுத்தப்படுகிறார்கள், இரண்டாந்தர குடிமக்களாக தரமிரக்கப்படுகிறார்கள் என்பதையும் இது வெளிக்காட்டியுள்ளது. போலீஸின் மிக அதிகபட்சமான ஆணவமும் செருக்கும் கொடூரமும் இனவாத உணர்ச்சிகளுக்கு எவ்வாறு தூபம் போடுகிறது என்பதையும் இது காட்டுகிறது. மூடிமறைப்பதற்கான முயற்சி, போலீஸ் அதிகாரியை பாதுகாக்கும் கதைகளைக் கட்டுதல் அரசுவழக்கறிஞர் குற்றவாளியின் மீது வழக்கு தொடுத்தல் போன்றவை நடப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும்கூட அச்சம் நிலவுகிறது. பிரௌனை கொலை செய்தவரை ஃபர்குசனில் குற்றஞ்சாட்டப்பட்டு, விசாரிக்கப் பட்டாலும்கூட, ஃபர்குசானில் வாழக்கூடிய வெள்ளையர்களை வைத்தே நடுவர்குழுவை (Jury) அமைப்பதற்கான அனைத்து வாய்ப்புகளும் உள்ளன.

இவ்வாறான கொலை குறித்து வெள்ளை யர்களின் மனநிலையில் மாற்றம் வராதவரை, வெள்ளை போலீஸ்காரரை குற்றம் சுமத்த எந்த வெள்ளை நடுவர்குழு உறுப்பினரும் முன்வர மாட்டார், தொடர்ந்து அவர் ஃபர்குசானில் வாழவும் முடியாது. தேசிய சோசலிசத்தின் கீழ் ஜெர்மானியர்கள் இருந்ததைக் காட்டிலும் அரசு வன்முறையின் கீழ் அமெரிக்கர்களுக்கு இனி எந்தப்பாதுகாப்பும் இருக்கப்போவதில்லை. கொடுங்கோல் ஆட்சியின்கீழ் அமெரிக்கா வந்துவிட்டது. அமெரிக்காவிற்கு இனி வரும் நாட்கள் மீண்டும் 'மிசிசிபி எரிகிறது' (Missisippi Burnings) என்பதாகவே இருக்கப்போகின்றன.

# தகவலறியும் உரிமையை உண்மையிலேயே மக்கள் அனுபவிக்க முடியுமா ?

சாதாரண ஏழைமக்களை மேலும் துயரத்தில் ஆழ்த்த ஒவ்வொரு நாள் கடக்கும்போதும் இம் முதலாளித்துவ அமைப்பானது தனது சுரண்டலையும் ஏமாற்றையும் தொடர புதுப்புது வழிகளையும் முறைகளையும் கண்டுபிடிக்கிறது. ஏக போகங்களும் அவர்கள்து கார்ப்பொரேட்டுகளும் மக்கள் ரத்தத்தை ஒரு சொட்டுவிடாமல் உருஞ்சுகிறார்கள். மக்களை ஏமாற்றி, அதன்மூலம் குழப்பம் அல்லது தவறான கருத்துக்களிலிருந்து மீண்டுவரமுடியாமல் செய்து சுரண்டலுக்கு எதிராக அம்மக்கள் எழுவ திலிருந்து தடுக்கின்றனர்.

சமீபத்திய விஷயம் என்னவென்றால், நாட்டில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ளும் வண்ணம் மக்களுக்கு உகந்த வசதிகள் ஏற்படுத்து தலாகும். ஒருபுறம், ஊடகங்களின் செய்திகளை உருவாக்கும் முழு கட்டமைப்பும் கடும் பிடியில் வைக்கப்பட்டு, ஏகபோகங்கள் மற்றும் கார்ப்பொ ரேட்டுகளால் நிதியுதவி அளிக்கப்பட்டு, கட்டுப் படுத்தப்பட்டு, கண்காணிக்கப்படுகிறது, இதன்மூலம் ஏகபோகங்களின் நலன்களுக்கு எதிராக போகாத செய்திகள், தகவல்கள் மட்டுமே மக்கள் பெறமுடியும்.

மறுபுறம், பளபளக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) மக்கள் கண்களுக்கு காட்டப்படுகிறது. எந்த தகவலையும் மக்கள் இதன்மூலம் பெறலாம் என உத்திரவாதம் அளிக்கப்படுகிறது. இது எவ்வளவு கேலிக்கூத்தானது என்பதை மீடியாக்களால்கூட தவிர்க்கமுடியாமல் சமீபத்திய சில கண்டுபிடிப்புகள் தெளிவாக்குகின்றன. இச்சட்டம் வந்து ஒருவருடம் கடந்த உடனேயே பல்வேறு ஏஜென்சிகள் மற்றும் அதிகாரிகளால் தனித்தனியாக 118 விதிகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசாங் கங்கள், நீதிமன்றங்கள், தகவல் கமிஷன்கள், பாராளு மன்றம் மற்றும் சட்டமன்றங்களால் இந்த விதிகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பல்வேறு மாநிலங்களால் பல்வேறு கட்டணங்கள் விதிக்கப்பட்டுள்ளன. விண்ணப்ப படிவத்தில் வேறுபாடு அல்லது அதிகாரிகளால் கோரப்படக்கூடிய பல்வேறு அடையாள அத்தாட்சி பத்திரங்கள், விண்ணப்பத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள வார்த்தைகளின் எண்ணிக் கைகள் அல்லது கட்டணம் செலுத்துதலில் உள்ள முறைகள் போன்ற என்னென்ன உள்ளனவோ அனைத்தும் உள்ளன. இவையெல்லாம் சேர்ந்தோ அல்லது தனியாகவோ முழு தகவல்களையும் பெறும் இச்செயற்முறைப்போக்கு நன்கு படித்தவர் களையே திக்கு முக்காடச்செய்கின்றது. எழுதப் படிக்கத் தெரியாத ஏழைகளைப்பற்றி சொல்லத் தேவையில்லை.

இந்த தகவலறியும் உரிமைச் சட்டமானது, மற்றபிற உரிமைகளைப் போலவே நடைமுறையில் நாட்டுமக்களின் கண்களில் மண்ணைத்தூவும் ஒரு முழு ஏமாற்றே தவிர வேறொன்றுமல்ல. இந்திய மக்களுக்கு தகவலறியும் உரிமை இருப்பதை இந்த உலகிற்குக் காட்டிக் கொள்ளவே இச்சட்டம் இருக்கிறது.

# “லவ்–ஜிகாத்” என்ற பதத்தை வைத்து பிஜேபி–ஆர்எஸ்எஸ் நடத்தும் கேடுகெட்ட விளையாட்டு

நாடு முழுவதும், குறிப்பாக உத்திரப் பிரதேசத்தில் ‘லவ்–ஜிகாத்’ என்ற பதத்தை வைத்துக்கொண்டு பிஜேபியும் ஆர்எஸ்எஸ்ஸும் பெரும் கூக்குரல் எழுப்பிவருகின்றன. வெவ்வேறு மதங்களைச் சார்ந்த இளம் பெண்களும் ஆண்களும் காதலிப்பதும் திருமணம் செய்து கொள்வதும் அதன்போக்கில் சில சமயங்களில் மதமும் மாறிவிடுவதையும் இதுபோன்ற எந்தவொரு சம்பவத்தையும் லவ் ஜிகாத் என்று முத்திரை குத்துகின்றனர். முஸ்லீம் அடிப்படை வாதிகளால் தற்போது எழுப்பப்படும் ‘ஜிகாத்’ என்ற பதத்துடன் சூழ்ச்சிகரமாகத் தொடர்புபடுத்தி விடுகின்றனர். இந்த காவிப்படை பிஜேபி–ஆர்எஸ்எஸ் கூட்டணியானது சிறுபான்மை சமூகத்தினருக் கெதிரான வெறுப்புப் பிரச் சாரத்தை ஊதிவிடுவதற்கான எந்த வாய்ப்பையும் தவற விடுவதில்லை. இந்த அல்லது பிற இதுபோன்ற திருமணங்கள் மற்றும் மதம் மாறுதல் அதிகரித்து விட்டதாக ஊதிப் பெரிதாக்குகின்றனர். இந்தவகையில் லவ்–ஜிகாத் விவகாரம் மற்றொரு புதிய உதாரணமாகும். உண்மை என்னவெனில், மீரட் பெண் விவகாரம் போன்று ஒரு சில தனிப்பட்ட நிகழ்வுகள் இருக்கலாம் இருப்பினும் இதில் மத உள்ளடக்கம் இல்லை. நிச்சயமாக இதுபோன்ற நிகழ்வுகள் பெரிதாக ஒன்றும் இல்லை, ஆதலால் அதுகுறித்து கோபவேசம் கொள்ள எந்தத் தேவையும் இல்லை

மேற்கு உ.பியில் மீரட்டின் சரவா கிராமத்தைச் சேர்ந்த ஒரு இந்துபெண் தான் கடத்தப்பட்டு, பலாத்காரம் செய்யப்பட்டு இஸ்லாத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டதாக முதலில் கூறினர். பின்பு, தனது குடும்பத்தினர் நிர்ப்பந்தித்ததாலேயே புகார் கொடுத்ததாகக்கூறி, தனது புகாரை திரும்பப்பெற்றார். அவ்வளவுதான்! இவ் விஷயத்தை முஸ்லீம் மதத்தினருக்கு எதிராக திருப்ப பிஜேபி தலைவர்கள் கிளம்பிவிட்டனர். மேற்கு உ.பியைச் சேர்ந்த பிஜேபி யின் செய்தி தொடர்பாளர் சந்திரமோகன், “.... பலஹீனமான இந்து பெண்கள் குறிவைக்கப்பட்டு, பொறியில் சிக்கவைக்கப்பட்டு இஸ்லாத்திற்கு மதமாற்றம் செய்ய கட்டாயப்படுத்தப்படும் உலக லவ்–ஜிகாத் திட்டத்தின் ஒரு பகுதியே இது” என குறிப்பிட்டார். பிஜேபியின் உபி மாநில தலைவர் லக்ஷ்மிகாந்த் பாஜ்பாய், “பலியாவது இந்து பெண்ணும் குற்றஞ்சுமத்தப்பட்டவர் முஸ்லீம்கள் என்ற ஏதோ இது வெறும் ஒத்தநிகழ்வு மட்டுமல்ல.... இந்து பெண்களை பொறியில் சிக்கவைப்பதும் இஸ்லாத்திற்கு மதமாற்றம் செய்வதுமான இது போன்ற அனைத்து நிகழ்ச்சிகளும் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டதன் விளைவுகளாகும் என கூறினார். ஆர்எஸ்எஸ்ஸின் மேற்கு உபியின் ஒருங்கி ணைப்பாளர் ராஜேஷ்வர்சிங், “முஸ்லீம் மற்றும் கிறிஸ்துவர்களின் மதமாற்ற ஏற்பாடான (நயா சுத்திகரன்) புதிய தூய்மைப்படுத்தல் திட்டம் டிசம்பரில் இரண்டுகட்டமாக நடக்கும் என்று அறிவித்தார்.

பிஜேபி–ஆர்எஸ்எஸ் தலைவர்களிடமிருந்து வரும் இதுபோன்ற பேச்சுக்கலெல்லாம் வெறிவாதத்தை தூண்டிவிடும், வகுப்புவாத தீயை மூட்டிவிடும் முயற்சிகளே தவிர வேறொன்றுமல்ல. இந்த லவ்–ஜிகாத் திட்டத்தின் எதிர்வினை மனோ நிலையானது பொதுமக்களின் ஒற்றுமைக்கு வேட்டுவைக்கக்கூடியது என்பதை இந்த இந்துத்துவத்தின் நாயகர்கள் மறுக்கமுடியுமா? இந்துக்களை பெரும்பான்மையாகக் கொண்ட இப்பெண்ணினுடைய சரவா கிராமமானது முன்பு அதன் தலைவராக ஒரு முஸ்லீமை தேர்ந்தெடுத்தது. ஆனால் தற்போது அக்கிராமம் மதஅடிப்படையில் இரண்டு பட்டுக்கிடக்கிறது.

பொய்மையின்மீது எழுந்துள்ள இந்தக் கொடிய பிரச்சாரமானது நாம் ஒரு ஜனநாயக சமூகத்திலா வாழ்கிறோம் என்ற கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியாது? வயதுவந்த ஒருவர் தனது வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் உரிமையை இங்கு பெற்றிருக்கிறாரா இல்லையா? காதலிப்பது, திருமணம்செய்து கொள்வது போன்ற அந்தரங்க, தனிப்பட்ட விஷயத்தின் குறுக்கே மதமும் வேறு எந்த ஒன்றும் வரமுடியாது இது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட புரிதலாகும். அவ்வாறு மதம் வருவதோ, அதில் தலையிடுவதோ பொது அறிவுக் குக்கூட பொருத்தமற்றதாக ஆகாதா? இருப்பினும் ஒரு தனிமனிதருடைய இந்த உரிமையைக்கூட இந்த அடிப்படைவாதிகள் மறுக்க முயற்சிக்கின்றனர். தமது மதவாதத் திட்டத்திற்கு ஏற்றதென்றால் பொருந்தி வருபவர்களாக இல்லை. தனிமனித உரிமை, சுதந்திரம் மற்றும் கௌரவத்தை மறுதலிக்க அவர்களுக்கு எவ்வித கூச்சமும் இல்லை. உலகில் எங்குமிருப்பது போலவே இந்தியாவிலும் மனித நாகரீகம் முன்னேறி சென்றதன் போக்கில் இந்த மதிப்புக்களும் உரிமைகளும் பரிணமித்தன என்ற யதார்த்தத்தை மறுப்பதே அவர்களின் ஒரே நோக்க மாகும். அவர்களது முயற்சிகளெல்லாம் மனிதன் மற்றும் அவனது சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் எதிரானதே தவிர வேறொன்றுமல்ல.

இவ்வாறெல்லாம் செயல்பட எது அவர்களை தூண்டுகிறது? இதில் எந்த ரகசியமும் இல்லை. பெரும்பான்மை (இந்து) மக்களை தாஜாசெய்து வாக்கு வங்கிளை உருவாக்கவும் பராமரிக்கவுமான குறுகிய பிளவுவாத ஆதாயத்திற்காக இந்துத்துவா திட்டத்தை பரப்புகிறார்கள் பிஜேபியின் மத்திய தலைமையானது அவர்களுடைய உ.பி. தலை வர்களின் பேச்சுக்களிலிருந்து தங்களை தூர வைத்துக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. அரசியல் தேவைக்காக தலைமை அவர்களை உற்சாகப்படுத்தவுமில்லை, கண்டிக்கவுமில்லை. இருப்பினும், அந்தத் தருணத்தில் பல மாநிலங்களில் இடைத்தேர்தல் நடைபெற இருந்ததால் இது தமது தேர்தல் நலன்களைப் பாதிக்கும் எனக் கருதினர் இந்துத்துவ கருத்தியலானது அவர்களுடைய விருப்பத்திற்கினிய திட்டமாக இருப்பதால், சந்தர்ப்பம் கிடைக்கும் தருணத்திலெல்லாம் வகுப்புவாத துருப்புச்சீட்டை அவர்களும்கூட பயன்படுத்த தவறுவதில்லை.

இவற்றிலிருந்து மக்கள் பாடம் கற்றுக்கொள்வது மிக எளிமையானதும் தெளிவானதுமாகும். இந்த சமூகத்தினர் அல்லது அந்த சமூகத்தினருக்கு எதிராக வகுப்புவாத சக்திகள் எவ்வாறெல்லாம் தங்களது ஆயுதங்களைத் தயார்படுத்துகிறார்கள் என்பது குறித்து ஜனநாயக எண்ணங்கொண்ட மக்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்கவேண்டியது அவசியமாகும். அவர்களது ஒவ்வொரு நடவடிக் கையும் மிகுந்த எச்சரிக்கையுடன் ஆய்வு செய்யப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேல், ஜனநாயக, மதசார்பற்ற மதிப்புக்களின் அடிப்படையில் தாங்கள் பாடுபட்டுஈன்ற ஒற்றுமையை மக்கள் பாதுகாக்க வேண்டும். இந்தக் காவிப்படைகள் உட்பட எவரும் வகுப்புவாத திட்டத்தின் அடிப்படையில் தங்களுடைய கொடிய திட்டத்தைக் கைக்கொள்வதிலிருந்தும் பொது மக்களிடையே பிளவையும் வேற்றுமையையும் தூண்டி விடுவதிலிருந்தும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

---

# பர்த்வான் குண்டுவெடிப்புச் சம்பவம்..

3ம் பக்கத் தொடர்ச்சி

தனக்கென ஒரு இடத்தை தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. மற்றொரு புறத்தில், சிபிஐ(எம்) மேற்குவங்கத்தில் இடதுசாரி இயக்கத்தின் நன் மதிப்பை குறைத்துவிட்டது. வெகுஜன இயக்கத் தின் பாரம்பரியத்தை நாசமாக்கிவிட்டது. மேலும் வகுப்புவாதத்திற்கெதிராக எந்த சித்தாந்தப் போராட்டத்தையும் அது நடத்தவில்லை. ஆகவே சிபிஐ(எம்) ஆதரவுடன் செயல்படும் இந்துக்கள் ஒருபகுதியினர் பிஜேபியிலும் முஸ்லீம்கள் ஒரு பகுதியினர், திரிணாமுல் காங்கிரஸ் பக்கமும் சேர்ந்தார்கள். மற்றொரு புறத்தில் திரிணாமுல் காங்கிரஸின் மோசமான ஆட்சி மக்களிடத்தில் கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த சாதகமான நிலைமையைப் பயன்படுத்தி ஊடகத்தின் பின்புலத்தோடு பிஜேபி இங்கே தலைதூக்குகிறது.

பிஜேபி காங்கிரஸ் இரண்டுமே வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங்களை அழித்தொழிப்பதற் காகவும், வாக்குவங்கிகளை உருவாக்குவதற்காகவும் வகுப்புவாதத்தை பயன்படுத்திவருகின்றன. அதே சமயம் காக்ரகர் சம்பவம் நாட்டின் பிரதானப் பிரச்சினையாகக் காட்டப்படுகிறது. ஆனால் எப்படிப்பட்ட “அச்சே தின்” (நல்லகாலம்) மோடியால் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்று நீங்கள் ஏற்கனவே கண்டுவருகிறீர்கள். ஒரே அடியில் இரயில் பயணக் கட்டணம் மற்றும் சரக்குக் கட்டணத்தை முறையே **14.2%** மற்றும் **6.5%** உயர்த்தியிருக்கிறார். அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்போதே மருந்துப் பொருட்களின் விலைகள் சாமானியர்களுக்கு எட்டாத உயரத்தில் இருக்கின்றன. தற்பொழுது மருந்துப் பொருட்களின் விலைகள் கட்டுக்கடங்காத அளவிற்கு உயர வழிவகுக்கும் வகையில் அரசின் கட்டுப்பாட்டையும் இதில் மோடி தளர்த்தியிருக்கிறார். இதைப்போலவே டீசல் விலைக் கட்டுப்பாட்டிலும் எண்ணெய் நிறுவனங்கள் தங்கள் இஷ்டத்திற்கு விலைகளை நிர்ணயம் செய்து கொள்வதற்கான வழிகளைத் திறந்து விட்டுள்ளார் கள். இதன் விளைவு போக்குவரத்துக் கட்டணங்கள், விலைவாசி மற்றும் விவசாய உற்பத்திச் செலவுகள் அனைத்தும் மிக செங்குத்தாக உயரும். இயற்கை எரிவாயுவின் விலை **33%** உயர்த்தப்பட்டுள்ளது. இதன் எதிர்விளைவாக உரம் மற்றும் பூச்சிகொல்லி மருந்துகளின் விலைகளும் மற்றும் குழாய்வழி எரிவாயுவின் விலைகளும் உயரும். **100** நாட்கள் வேலைத்திட்டமும் கூட தற்போது வெறும் **200** மாவட்டங்களுக்கு மட்டும் என்று குறுக்கப்பட்டு கூலித்தொகையையும்கூட குறைக்கப்பட்டுவிட்டது. விவசாயநிலத்தைக் கையகப்படுத்துவதில் **70** சதமானவர்களின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்று இருந்ததை **50** சதமானவர்களிடம் ஒப்புதல் பெற்றாலே போதும் என்று மாற்றியிருக்கிறது. அதிக எண்ணிக்கையில் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் நிறுவப்படஉள்ளன. தொழிலாளர் சட்டங்களைத் திருத்தியதன் மூலம் முதலாளிகள் தங்கள் விருப்பத்திற்கேற்றார்போல் ஆலைகளை மூடிக்கொள்ளவும், தொழிலாளர்களை வேலை யிலிருந்து விரட்டியடிக்கவும், குறைந்த கூலிக்கு ஆட்களை நியமித்துக் கொள்ளவும் மற்றும் அவர்கள் விருப்பத்திற்கு வேலைநேரத்தை அதிகரித்துக் கொள்ளவும் முதலாளிகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. இவ்வாறாக தொழிலாளி களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பிலிருந்து முதலாளிகள் விடுவிக்கப் பட்டுள்ளனர். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும், சுரங்கங்களிலும் அன்னிய மூலதனத்தை அனுமதிப்பது ஆரவாரத்துடன் நடந்துவருகிறது. ஏற்கனவே இராணுவத்திலும் இன்சூரன்ஸ் துறையிலும் **49** சதவிகித நேரடி அன்னிய முதலீடு அனுமதிக்கப்பட்டுவிட்டது. இவ்விதமாக அரசாங்கம், முதலாளிகளுக்கு “அச்சே தின்” (நல்ல காலத்தை) கொண்டு வருவதற்காக செயலாற்றி வருகிறது.

இந்திய அரசாங்கத்தின் அன்னியக்கடன் ரூ **26,76,600** கோடிகளாகவும் உள்நாட்டுக் கடன் ரூ **46,25,037** கோடிகளாகவும் உயர்ந்திருக்கும் இத்தருணத்தில் அரசாங்கம் ரூ**36,50,000** கோடி களை கார்ப்பொரேட்டுகளுக்கும் ஏகபோகங் களுக்கும் வரித்தள்ளுபடியாகவும் வரிவிலக்காகவும் அறிவித்திருக்கிறது. இந்தக் தொகை, விலையை உயர்த்துவதன் மூலமாகவும் வரியை உயர்த்துவதன் மூலமாகவும் மக்களிடம் வசூலித்து சரிகட்டப்படும். இவ்வாறாகத் தொடர்ந்து அடுக்கடுக்கான பொருளாதாரத் தாக்குதல்களுக்கு மக்கள் உள்ளாக்கப்பட்டு வரும் நிலையில் எதிர்ப்பு இயக்கங்களில் அவர்கள் திரண்டெழுவது என்பது தவிர்க்கவியலாது. ஆகவே, இந்துத்துவம் என்ற பயமுறுத்தும் பிரச்சாரத்தையும் மற்றும் தீவிரவாத சம்பவங்களையும் ஊதிப்பெரிதாக்குவது அவர்களுக்கு அவசியமாகிறது. இதை நாம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் யாரெல்லாம் திசைமாறிப்போய் தீவிரவாத நடவடிக்கைகளில் இணைந்து தற்காப்பு என்ற சாக்கில் மிகக்குறுகிய அடிப்படைவாத முழக்கங்களை எழுப்புகிறார்களோ அவர்கள் உண்மையில் சிறுபான்மை சமூகத்திற்குத் தீங்குவிளைவிக்கிறார்கள். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களும் கூட மத அடிப்படைவாதத்தையும் தீவிரவாதத்தையும் எதிர்த்துப் போராட முன்வரவேண்டும். எந்த மத ஸ்தாபகரும் ஒருபோதும் பிற மதத்திற்கு எதிராக வெறுப்பையும் இணக்கமின்மையையும் போதித்ததில்லை. நேர்மையான மதப்பற்றுள்ள எவரும் மதம் என்ற பெயரில் சண்டையிட்டுக் கொள்வதையும் இரத்தம் சிந்துவதையும் ஆதரிக்கமுடியாது. மத நம்பிக்கை, மத அடிப்படைவாதம் என்ற இரண்டும் ஒன்றல்ல. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு மத்திய மாநில அரசாங்கங்களின் முதலாளித்துவ ஆதரவுக் கொள்கை களுக்கெதிராக ஒன்றுபட்ட மக்கள் போராட்டங்கள் வளர்ந்தெடுப்பதிலும் அதில் வகுப்புவாதத்திற் கெதிரான சித்தாந்தப் போராட்டத்தை இணைப் பதிலும்தான் இருக்கிறது.

# தோழர் கௌரிசங்கர் கடக் புரட்சி மற்றும் விஞ்ஞானத்தின் நடைமுறைச் செயல்பாடுகளை ஒன்றிணைக்கும் போராட்டத்தைக் கையிலெடுத்தார்

## நினைவுக் கூட்டத்தில் கட்சித் தலைமை



சமீபத்தில் நம்மை விட்டு மறைந்த தோழர் கௌரி சங்கர் கடக் அவர்களின் மறைவை அனுஷ்டிக்கும் நிகழ்ச்சி நவம்பர் 19 அன்று கொல்கத்தா மௌலாலி யூத் சென்டர் அரங்கத்தில் நடந்தது. இந்தக் கூட்டம் விஞ்ஞானத்தையே வாழ்க்கை லட்சியமாக ஏற்றுக் கொண்ட, அந்த விஞ்ஞான அறிவின் பலத்தினால் தன்னால் கொஞ்சம் கொஞ்சமாகப் பெறமுடிந்த அறிவின் வெளிச்சத்தினால் தன் வாழ்வை இடையறாது புத்தூக்கம் செய்துகொண்ட உத்வேகம் கொண்ட விஞ்ஞான மாணவரான கௌரிசங்கர் கடக் அவர்களின் நினைவுக் கூட்டமாகவும் அமைந்தது. இந்த நினைவுக் கூட்டத்தில் எஸ்யுசிஐ கம்யூனிஸ்ட் கட்சியின் பொலீட்பீரோ உறுப்பினர்கள் தோழர் மனிக்முகர்ஜி மற்றும் தோழர் அசித் பட்டாசார்யா ஆகியோரும், பிரேக்துரூ சயின்ஸ் சொசைட்டி (BSS), இன் தலைவரும் அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் பொதுச் செயலாளருமான தோழர் துருபாஜோதி முகபத்யாயா அவர்களும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இன் மூத்த பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் ரஞ்சித்தார் அவர்களும் மேடையில் இருந்தனர். மேற்குவங்க மாவட்டக் கமிட்டியின் உறுப்பினரும் கல்கத்தா மாவட்ட கமிட்டியின் செயலாளரான தோழர் சிராரஞ்சன் சக்ரவர்த்தி கூட்டத்திற்கு தலைமை ஏற்றார்.

நிகழ்ச்சியின் துவக்கமாக தோழர் கௌரிசங்கர் கடக் இன் உருவப்படத்திற்கு கட்சியின் தலைவர்கள் மற்றும் பல்வேறு வெகுஜன அமைப்பின் தலைவர்களும் மற்றும் குடும்பத்தினரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய தோழர் சிராரஞ்சன் சக்ரவர்த்தி தோழர் கௌரி சங்கர் அவர்கள், இடையறாது அறிவைத் தேடியடைவதிலும் அதேநேரத்தில் கட்சிவழங்கும் எப்பணியையும் ஏற்றுக் கொண்டு நிறைவேற்றுவதற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு மனிதர் என்று குறிப்பிட்டார்.

அவ்வாறான அவரது முயற்சி மற்றும் செயல்பாட்டில் தெருக்களில் இறங்கி சுவரொட்டிகளை ஒட்டுங்கள் என்று அவரைக் கேட்டுக் கொண்டிருப்போமேயானால் நிச்சயமாக அதனையும் நிறைவேற்ற அவர் தயார் என்றுதான் சொல்லியிருப்பார். தயக்கமின்றி அதனை நிறைவேற்றியும் இருப்பார் என்று குறிப்பிட்டார். தோழர் கௌரி சங்கரின் மாணவர்பருவத்து நண்பரும் சகாவுமான துருபாஜோதி முகபத்யாயா அவர்கள் பேசுகிறபோது 1964–65 காலகட்டத்தில் தோழர் சிப்தாஸ் கோஷின் சொற்பொழிவைக் கேட்டபிறகு தோழர் கௌரிசங்கர் எவ்வாறு கட்சியை நோக்கி ஈர்க்கப்பட்டார் என்பதை நினைவுகூர்ந்தார். அவர் அத்துடன் நிற்கவில்லை தோழர் கோஷ் தனது உரையில் சொன்னதற்கு ஏற்றவகையில் நடைமுறையில் கட்சி எவ்வாறு செயலாற்றுகிறது என்பதை தோழர் முகபத்யாயா அவர்களுடன் மேற்குவங்க பிர்பும் மாவட்டத்தில் உள்ள கிராமத்திற்குச் சென்று நேரில் பார்த்து அதில் திருப்தி கொண்டபிறகு அவர் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி என்ற முடிவுக்கு வந்தார். சமூகக் கடமைகளை நிறை வேற்றுவதிலிருந்து விலகாமல் விஞ்ஞானத்தின் நடைமுறைகளை செயல்படுத்துவதிலும் ஈடுபடுவேன் என்று கட்சித் தலைமையிடம் அவர் தன்னை ஒப்புவித்தார்.

தோழர் கௌரிசங்கர் கடக் இன் பல்வேறுபட்ட வாழ்க்கைப் பரிமாணங்களைச் சுட்டிக்காட்டிப் பேசிய தோழர் அசித் பட்டாச்சார்யா, விஞ்ஞானம் பயிலுகின்ற பலரையும் போலல்லாமல் அவர் தன்னால் தேடிப்பெறமுடிந்த அறிவைக்கொண்டு தன்னையும், வாழ்க்கையையும், தன் ஆன்மாவையும் தொடர்ந்து புதுப்பித்து புதிய பாணிக்கு தன்னை வடிவமைத்துக் கொண்டவர் என்று குறிப்பிட்டார். துவக்கத்திலிருந்தே எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி ஒரு ஆழமான அறிவின் அஸ்திவாரத்தில் கட்டி எழுப்பப்பட்டது என்று குறிப்பிட்ட தோழர் அசித் பட்டாசார்யா அந்த அறிவை ஆழப் படுத்துவதற்காக போராட்டத்தை தீவிரப் படுத்தி விரிவாக்கியதில் கட்சி மேலும் வளர்ந்துள்ளது.

அத்தகைய அறிவை தொடர்ச்சியாக வளர்த்தெடுப்பதிலும் பல்வேறு கிளைகளில் அதனை விரிவாக்கி மேலும் ஆழப்படுத்துவதிலும் தோழர் கௌரிசங்கர் ஒரு குறிப்பிடத்தகுந்த பங்காற்றினார். விஞ்ஞானத்தின் அடிப்படையிலான கட்சியின் சிந்தனைகளுக்கு மிகச்சரியான வெளிப்பாட்டுவடிவம் கொடுப்பதிலும் சரியான மொழியில் சரியான பிரயோகத்தில் வடிவமைப்பதன் மூலம் கட்சியின் இலக்கியங்களை வெளியிடுவதில் அவர் பங்காற்றினார். தோழர் சிப்தாஸ் கோஷ் தேர்வு நூல்களை ஆங்கில மொழியில் வெளியிடுவதில் அவர் ஆற்றிய பங்கு என்றென்றைக்கும் நினைவுகூறப்படும்.

அவரது துறையான புவியியல் துறையில் அவர் பெரும் நிபுணத்துவம் கொண்டிருந்தார். புவியியல் துறையின் பல்வேறுபட்ட அறிவார்ந்த விஷயங்கள் குறித்த அவரது கருத்துக்களை முன்வைப்பதற்காக பல்வேறு நாடுகளிலிருந்தும் அழைக்கப்பட்டார். சர்வதேச அளவில் புகழ்பெற்ற விஞ்ஞானியாக அவர் உருவாவதற்கான எல்லா திறமைகளும் அவரிட மிருந்தன. ஆனால் பெயர், புகழ் ஆகியவற்றுக்காக அவர் எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையும் அவருக்கில்லை.

நமது ஆங்கிலப் பத்திரிகையான புரோலிட்டேரியன் எரா வெளியிடுகின்ற பொறுப்புடன், விஞ்ஞான இயக்கம் மற்றும் கல்விப் பாதுகாப்பு இயக்கத்திற்கான பொறுப்பையும் கூடுதலாக ஏற்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டபோது தன் வயதின் சிரமங்களை கொஞ்சமும் பொருட்படுத்தாது தயக்கமின்றி அதனை ஒப்புக் கொண்டார். பல்வேறு நாடுகளிலிருந்தும் கல்வி நிறுவனங்களிடமிருந்தும் அவருக்கு விடுக்கப்படும் அழைப்பை இனிமேல் ஏற்க வேண்டாமென்றும் அவரின் சிறப்புத்துறையான புவியியல் துறைபற்றிய ஆய்விற்குப் பதிலாக ஒரு முழுமையான தத்துவார்த்த படிப்பில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப் பட்டபோது அவர் மிகுந்த உறுதியோடு ஒரு இளைஞனுக்குரிய உத்வேகத்தோடு செய்வதாக உறுதியளித்தார்.

சில அறிவுஜீவிகள் குழம்பிய சிந்தனைகளுடன் விஞ்ஞானம் என்ற பெயரில் தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனைக்கு எதிராகப் பேசியபோது அவர் தன் மூத்தின் மூலம் மிகத்தீர்மானகரமாகப் பதிலடி கொடுத்தார். இம்மாதிரியான தனிச்சிறப்பான குணாம்சம் கொண்டவர்கள் வெறுமையிலிருந்து தோன்றுவதில்லை. அவர்கள் இடையறாத போராட்டத்தின் உருவாக்கங்களே; அத்தகைய போராட்டங்களுக்கு மார்க்சிசம்–லெனினிசம் மட்டுமே ஆயுதமாகும். தோழர் கௌரிசங்கர் கடக் மார்சிசம்–லெனினிசம் மற்றும் விஞ்ஞானம் இவை இரண்டுக்கும் இடையில் ஒரு ஒருங்கிணைவான செயலாக்கத்தையும் பரிமாற்றத்தையும் எட்டுவதற்கான போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதன்மூலம் விஞ்ஞானம் பற்றிய உயர்மட்டப் புரிதலை வளர்த்தெடுக்கும் உயர்நிலைக்குச் சென்றார்.

தோழர் மனிக்முகர்ஜி தனது உரையில் தோழர் கடக் அவர்கள் கட்சியின் தொடர்புக்கு வந்தபொழுது பல்வேறு விஞ்ஞான உண்மைகளைப் பற்றியும் தகவல் சார்ந்த விவரங்கள் பற்றியும் தான் நன்கு அறிந்திருந்ததாகவும்; ஆனால், உலகத்தின் அறிவாதாரத்துறை மற்றும் முழுமைபெற்ற அறிவிற்கும் விஞ்ஞானத்துறை பங்களிப்பு என்ன? என்பது பற்றியும், விஞ்ஞானம் எவ்வாறு மக்களோடு தொடர்புடையது? என்றும், சமுதாய வளர்ச்சிக்கு விஞ்ஞானம் எவ்வாறு பங்காற்ற முடியும்? என்றும் இவைபோன்ற அனைத்துக் கேள்விகளுக்கும் கட்சியின் சிந்தனைகளிலிருந்து மட்டுமே விடைகாணமுடிந்தது என்று உணர்ந்து கொண்டார். அவ்வப்போது அதனைப் பலரிடம் வெளிப்படுத்தியும் வந்தார்.

தனக்கென ஒரு தனிப்பட்ட எதிர்கால வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் விருப்பத்தை வேரோடு களைந்தெரியும் போராட்டத்தை அவர் நடத்தினார். விஞ்ஞான நடைமுறைச் செயலாக்கத்தையும் புரட்சிக்கான போராட்டத்தையும் இணைக்கும் போராட்டத்தினை அவர் நூறு சதம் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாமல் போனதில் அவருக்கு வேதனை இருந்தது. ஆயினும், இன்று நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் விஞ்ஞானத்தை நடைமுறைப் படுத்துவதென்பது–மார்க்சிசம் லெனினிசம் சிப்தாஸ் கோஷ் சிந்தனை மற்றும் அதன் தார்மீக ஒழுக்க நீதிநெறித்தரங்களிலிருந்து உருவான புரட்சிகர அரசியல் திசைவழியின் தொடர்புக்கு வந்து அதனை ஏற்றுக் கொள்ளாமல் சாத்தியமில்லை என்பதை அவர் உணர்ந்து கொண்டிருந்தார். அவ்வாறில்லையெனில், தனிப்பட்ட அபிலாசைகள் மற்றும் தனிப்பட்ட எதிர்கால வாழ்க்கைக்கான துர்குணங்கள் அவர்களைப் பீடித்துக் கொள்ளும். அவர் ஒரு சிறந்த அறிஞரும் புகழ்பெற்ற பேராசிரியரும் ஆவார். இருப்பினும்கூட அவரால் எழுதப்பட்ட கட்டுரைகளின் பதிப்பிற்கு முந்தைய வடிவங்களை மீண்டும் மீண்டும் சரிபார்த்து திரும்பவும் எழுதி கட்சியின் கருத்து மற்றும் திசைவழி சரியாக பிரதிபலிக்கப்பட்டிருப்பதை உறுதிப் படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.



நவம்பர் 19, 2014 கொல்கத்தாவில்
தோழர் கௌரிசங்கர் கடக் நினைவு தினக் கூட்டம்

அவர் எங்களைவிட விஞ்ஞானத் துறையில் ஏராளமான விஷயங்கள் பற்றி அறிந்திருந்தார். ஆனால் கட்சித் தலைமையிடத்தில் மிகுந்த விசுவாசத்தைக் கொண்டிருந்தார். இன்று பல்வேறுபட்ட விஞ்ஞானத் துறையில் புதிய புதிய பரிசோதனை ரீதியாக நிரூபிக் கப்பட்ட உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்த உண்மைகள் மனித வாழ்க்கையில் அதன் பிரயோகத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் மக்கள் விஞ்ஞானத்தின் சாதனைகளையும் பலன்களையும் அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கின்றார்கள். தோழர் கௌரிசங்கர் கடக் விஞ்ஞானப்பூர்வ அணுகுமுறை மற்றும் பகுப்பாய் வின் பலத்தினால் முதலாளித்துவ சமூக அமைப்பு முறையின் காரணமாக எப்படியெல்லாம் மக்கள் விஞ்ஞானத்தின் பலன்களை அனுபவிக்கமுடியாமல் இருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டும் திறன்பெற்றிருந்தார். அவரது மரணத்தினால் ஏற்பட்டிருக்கின்ற மிகப்பெரும் இழப்பு இங்குதான் இருக்கிறது. முதலாளித்துவத்தின் கட்டுத்தளையிலிருந்து விஞ்ஞானம் விடுவிக்கப்பட வேண்டும். இல்லையெனில் மனித சமூகத்திற்கு எந்த நன்மையும் கிட்டாது என்ற அவரின் இந்த ஆழமான புரிந்துணர்தல் நிச்சயமாக சமூகப்புரட்சிக்கு பேருதவி புரியக் கூடியது. அவர் நடத்திவந்த அந்தப் போராட்ட த்தினை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமென விஞ்ஞானத்தின் மாணவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சமூகம் மற்றும் மனித இனம் எந்த வரையறுக்கப்பட்ட விதியின் அடிப்படையில் இயங்குகிறது என்பதைப் புரிந்து கொண்டு அந்த விஞ்ஞானப்பூர்வ அணுகுமுறையின் அடிப்படை யில் நாம் அவற்றைப் பின்பற்றவேண்டும். முதலாளித்துவம் தகர்ந்து சோசலிச சமூகம் உதயமாகும் என்பது சமூகமாற்றத்தின் விஞ்ஞானப்பூர்வ விதியினால் தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். இன்றோ நாளையோ அது நிச்சயம் நடைபெறும் என்பதை விதிகள் உறுதிப்படுத்துகின்றன. இந்தப் புரிந்துணர்தல் தவிர்க்கப்படமுடியாதது. இந்த அடிப்படைப் புரிதலே மக்களின் முன்முயற்சிக்கு வழிதிறந்துவிடும், அது புரட்சி பருண்மைப்பட்ட வழியில் நடைபெற உதவிபுரியும்.

வருங்காலங்களில் யாரெல்லாம் விஞ்ஞானத்தைப் புரட்சிக்கு உறுதுணைபுரிகின்ற வகையில் நடைமுறைப்படுத்த விரும்புகிறார்களோ அவர்கள் ஒவ்வொருவருக்கும் கௌரிசங்கர் கடக் அவர்களின் குணாம்சங்கள் மதிப்புமிக்க முன்று தாரணமாகத் திகழும். அதே நேரத்தில் அப்படிப்பட்ட குணாம்சம் கொண்டவர்கள் தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனையை உணர்ந்து கொள்வதன் மூலம் மட்டுமே வளர முடியும் என்ற முக்கியத்துவம் கொண்ட விஷயத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் அவரின் வழியில் ஒரு படி முன்செல்ல விரும்புகிறவர்கள் அனைவரும் அவர் கடந்துவந்த இப்பாதையைத் தேர்வுசெய்ய வேண்டும்.

சர்வதேசிய கீதம் இசைக்க கூட்டம் நிறைவுற்றது.

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 27th December 2014

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2012-14
WPP Licence No:TNCCN/153/2012-14
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# தமிழக அரசாங்கத்தின் பால் விலை உயர்வு

## தனியார் நிறுவனங்களின் லாபவேட்டைக்கு மேலும் துணை, மக்களின் வாங்கும் சக்தி குறைக்கப்படுகிறது

பால் நினைந்துட்டும் தாய் சாலப்பரிந்தும் ஊட்ட முடியாத நிலை இரத்தசோகை நோய்ப் பிடித்தவர்களாக 60% மேலான எண்ணிக்கையில் பட்டினியில் வாடும் நிலையில் ஆவின்பால் சற்று கிடைத்தது. அந்தப்பாலும் தமிழ்நாட்டில் கசக்கிறது. பால் விலை ஏற்றத்தால் பருக முடியாதநிலை உள்ளபோது பால் இனிக்கவாசெய்யும்? கசக்கத்தானே செய்யும்! அதன் விலை உயர்வு. தமிழ்நாடு அரசாங்கம் எல்லாவித ஆவின் பால்விலையையும் 10 ரூபாய் உயர்த்திவிட்ட நிலையில் பால்விலையைக் கேட்டதுமே சர்ரென்று அதிர்ச்சியில் வாய்பிளக்கிறது. இந்த ஆவின்பால் விலையுயர்வும் நவம்பர் ஒன்றாம்நாளிலிருந்து நடைமுறைக்கு வந்துவிட்டது. சந்தைப் பெயரில் தனியார் விற்கும் பால்விலையும் ஏறிவிட்டது. ஊட்டச் சத்துக்கள் இல்லாத குழந்தைகளுக்குத் திட்டங்களைக் கொண்டு வருவதாக ஆளும் வர்க்கங்கள் பசப்புவது அப்பட்டமான பசப்பல் என்பதை பால் விலையேற்றம் மீண்டும் உறுதிப்படுத்திவிட்டது. பள்ளி செல்லும் வரையிலான காலத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழும், வறுமைக்கோட்டைத் தொட்டும் வாழு(டு)ம் மக்களும் இவ்விலையுயர்வினால் கடும் துன்பங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் இதை ஒட்டி குழந்தை பால்பவுடர் விலையும் விரைவில் ஏற்றப்படும் பள்ளிக்கூடத்தில் சத்தான உணவு பால் என்று படிக்கமட்டும் முடியும். குழந்தைகள், சிறுமி–சிறுவர்கள் மட்டுமின்றி அனைத்து மனிதர்களின் உணவு–ஊட்டச்சத்துத் தேவையில் ஒரு சிறு பகுதியை நிறைவு செய்வது பால். மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு பரிந்துரைக்கப்படும் முக்கிய பொருள் பாலும் பலவகைப் பழங்களுமே. சோறின்றி பாலின்றி, நீரின்றி அன்றாடும் செத்துப்பிழைக்கும் மக்களுக்கு இரண்டாம் நாளைக்கு பால் ஊற்றும் நிலையைத் தடுத்து நிறுத்திட பால்விலை உயர்வைத் திரும்பப் பெறுமாறு தமிழ்நாடு அரசாங்கத்தை கேட்டுக் கொள்வதோடு, அதை உத்திரவாதப்படுத்த வலிமையான மக்கள் போராட்டங்களைக்கட்டுமாறு மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

அத்துக்கூலி அன்றாடங்காய்ச்சிகள் முதல் அனைத்து மக்களும் அன்றாடம் பருகும் பானமான டீ, காபி விலையும் பால் விலையுயர்வைத் தொடர்ந்து ஏற்றப்பட்டுவிட்டது. அரசின் பால் நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குவதால் பால்விலை ஏற்றப்படுவதாக அரசு அறிவித்துள்ளது. நஷ்டத்துக்கான உண்மையான காரணம், திறமையற்ற, பொறுப்பற்ற, நிர்வாகம், ஆளும் கட்சிகளின் அத்துமீறிய தலையீடுகள் உள்ளூர ஊறிக்கிடக்கும் ஊழல் முதலியவைகளே என்பது நாடறிந்த அங்காடி இரகசியம். சமீபத்தில் விழுப்புரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புலனாய்வுக்கும் குற்ற வழக்குப் பதிவுகளுக்கும் காரணமான ஊழல் நாடறிந்த உண்மை.

மாடுவளர்க்கும் விவசாயிகளுக்கு கட்டுபடியாகவில்லை என்கிற வாதமும் ஒப்புக்குச் சொல்லப்படுகிறது. உண்மையில் மாடு வளர்ப் போருக்கும் வாங்கும் மக்களுக்கும் இடையிலுள்ள இடைத்தரகர்கள், அரசு தனியார் நிறுவனங்கள் முன்பும் விலையேற்றத்துக்கு பின்பும் லாபமடைந்து வருகின்றனர்.

மாடுவளர்ப்பில்– பல்கறப்பில் தேவைப்படும் பொருட்களான மாட்டுத்தீவனங்கள், புண்ணாக்கு, பருத்திக் கொட்டை, தவிடு, சிலவகைத் தானியங்கள் இவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. அரசின் வரிக்கொள்கை, விலைக்கொள்கை, உலகமயம், தனியார்மயம் இவற்றின் விலை பொருளே விலை உயர்வு. புல்கட்டு விலையும் ஏறிவிட்டது. அரசினால் ஆறு குளம், ஏரிகள் ஒழுங்காக மராமத்து செய்யப்படாமல் புல்கூட முளைக்காத இடங்களாக அவை மாறிவருகின்றன. நீர் ஆதாரப்பகுதிகளும்– விளைச்சல் தரும் நன்செய் நிலங்களும் தான் தோன்றித்தனமாக எவ்வித கட்டுப்பாடும் இன்றி பெருத்துவிட்ட ரியல் எஸ்டேட்டுகளும், புல் முளைக்கும் இடங்களை கட்டாந்தரைகளாக மாற்றிவிட்டன. அதிகார, அரசியல் சக்திகளினால் ஆக்கிரமிப்பு செய்யப் படுவதும் இவற்றைத் தடுத்து அனைத்து மக்களின் அன்றாட இன்றியமையாப் பொருளாகிவிட்ட பால்விலையைக் குறைத்திட நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏற்கனவே வாங்கும் சக்தியை இழந்து வருகின்ற மக்களை மேலும் சொல்லொணாதத் துயரத்திற்குள்ளாக்கியது இந்த விலை உயர்வு.

அக்டோபர் 2014 இல், 4–5 பேர் உள்ள குடும்பம் தங்களது குறைந்த வருமானத்தில் 1 லிட்டர் பால் ரூபாய் 35க்கு வாங்கியது. (பால், தயிர் உட்பட) அந்தக் குடும்பங்கள் இன்றைக்கு அதே தொகையில் முக்கால் லிட்டர் பாலைத்தான் வாங்கமுடியும். அதாவது தினசரி கால் லிட்டர் பாலை வாங்கும் சக்தியை இவ்விலையுயர்வு குறைத்துவிட்டது. கால்லிட்டர் பாலை வாங்கமுடியாதவர்களாக மக்கள் மாற்றப்பட்டுவிட்டனர். இதைத்தான் பொருளாதாரத் துறையினர் வாங்கும் சக்தி குறைந்துவருகின்றது என்று கூறுகின்றனர். ஏற்கனவே ரயில் கட்டணம், பேருந்துக் கட்ணம், சர்க்கரை விலை உயர்வு என்று படிப்படியாக வாங்கும் சக்தியை இழந்து வாடும் மக்களை மேலும் வாங்கும்சக்தியற்றவர்களாக மாற்றுகிறது இவ்விலையுயர்வு திட்டக்கமிஷன் நியமித்த குழு அறிக்கையின்படி குறைந்தபட்ச வருமானமாகக் கருதப்படும் 27 ரூபாயில் அரை லிட்டர் பால் மட்டுமே வாங்க முடியும். இதரப் பொருட்களை எப்படி வாங்குவது யாரிடம் போய் கேட்பது?

பால் விலைஉயர்வு பரந்த மக்கள் திரளின் பெரும் பகுதியை கடுமையாகப் பாதித்ததை எதிர்த்துப் போராடவேண்டும் அதே நேரத்தில் ஆடு மாடுகளை வளர்த்து வயிற்றைக் கழுவும் பெரும்பாலான கிராமப்புற, சிறு நகரமக்களின் துன்பத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும். உண்மையில் இந்த விலையுயர்வில் ஒரு சிறு பகுதியே அவர்களைச் சென்றடையும். மீதிப் பெரும்பகுதி பால் வியாபாரிகள், பால்விற்பனைப் பண்ணைகளுக்கும் அதிகாரிகளுக்கும் சென்றுவிடும்.

நாடெங்கிலுமுள்ள உழைக்கும் மக்கள் பஸ் கட்டணம், ரயில்கட்டணம், மின்கட்டணம், கல்விக்கட்டணம் சரக்குக் கட்டண உயர்வுகள் கழுத்தை முறிக்கும் வரிச்சுமையில் பாதிக்கப்பட்டு குரலெழுப்பி வருகின்றனர். அதைப்போலவே மாட்டுத்தீவனம் உட்பட மேற்குறிப்பிட்ட ஆடு மாடு வளர்ப்போர் வாங்கும் மாட்டுத் தீவனங்கள், கால்நடை மருந்துகள் ஆகியவற்றின் விலைகளும் குறைக்கப்பட வேண்டும். அதுவே கட்டுபடியாகக் கூடிய விலையில் கிராமப்புற ஆடு மாடு வளர்க்கும் விவசாயிகளை துன்பத்திலிருந்து விடுவிக்கும். அக் கோரிக்கைகளை நகர்ப்புற நடுத்தர மக்களும் படித்த,தொழிற்துறை, விற்பனைத்துறை, சேவைத்துறையில் பணியாற்றும் உழைக்கும் மக்களும் உணரவேண்டும். அப்பொருட்களின் மீதான விலையுயர்வுகளுக்கும் எதிராக அனைத்துப்பகுதி மக்களும் குரல்கொடுத்து அப்போராட்டங்களில் நாமும் பங்கெடுத்து ஆதரவு தரவேண்டும்.

# கட்சியின் புதிய மத்திய அலுவலகம் திறப்பு...

*2ம் பக்கத் தொடர்ச்சி*

என்று அவர் அறைகூவல் விடுத்தார். நமது கட்சியில், அதே போன்று நமது வெகுஜன அமைப்புகளிலும் இது ஒரு உயிரோட்டமான போராட்டம். அந்தப் போராட்டத்தை நடத்துவதில் இந்த அலுவலகம் குறிப்பிடத்தக்க பங்காற்றும் என்று நான் மீண்டும் உறுதியுடன் கூறிக் கொள்கிறேன்.

கட்சியை உருவாக்குகையில் எத்தகைய கடினமான போராட்டங்களை மேற்கொண்டு தோழர் சிப்தாஸ் கோஷ் இந்தக் கட்சியைக் கட்டினார் என்பதை நீங்கள் கேட்டறிந்தீர்கள். இன்று கட்சி வளர்கிறது, விரிவடைகிறது, நாடு முழுவதும் பரவுகிறது. ஆயிரமாயிரம் தொழிலாளர்களும் விவசாயிகளும் கட்சியின் குடையின்கீழ் அணிவகுக்கின்றனர். நாட்டின் பல்வேறு மூலைகளில் பல போராடும் மாணவர்கள், இளைஞர்கள், மற்றும் பெண்கள் தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனையால் கவர்ந்திழுக்கப்பட்டு கட்சியில் இணைகின்றனர். கட்சியின் பலம் பெருகுகிறது, அது தொடர்ந்து வளரும்.

நாளை நான் வங்கதேசம் செல்கிறேன். மார்க்சிசம் –லெனினிசம்–தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் அடிப்படையில் ஒரு சக்திவாய்ந்த புரட்சிகரக் கட்சி அங்கே வளர்ந்துவருகிறது. அந்தக் கட்சி அங்கே மாநாட்டை நடத்துகிறது. நம்மை அவர்கள் அழைத்திருக்கிறார்கள். நமது கட்சியின் பிரதிநிதியாக அங்கே நான் செல்கிறேன். தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனை வேறு பல நாடுகளிலும் படித்து உய்த் துணரப்பட்டு வருகின்றது. இது வரலாற்றுச் சிறப்புமிக்க இயக்கத்திற்கான வடிவத்தை எடுத்துள்ளது. கட்சி வளர்கிறது, அது தொடர்ந்து வளரும். பல அலுவலகங்கள் தேவைப்படும். மேலும் பல அலுவலகங்கள் திறக்கப் படும். எனது மற்றும் உங்கள் அனைவரின் மனசாட்சியையும் உணர்ச்சியோடு எழுப்புவதற்காக, தோழர் சிப்தாஸ் கோஷின் சில வார்த்தைகளோடு முடிக்கிறேன். இந்த வார்த்தைகள் தலைமுறை தலைமுறையாக, நாம் இல்லாதபோது எதிர்காலத்தில் வருபவர்களுக்கும் ஒரு உயிரோட்டமான வாழும் சக்தியாக நிச்சயம் விளங்கும். எனவே தோழர் சிப்தாஸ் கோஷ் கூறியதை நான் மீண்டும் வாசிக்கிறேன்;

‘கட்சியை தொடங்கியபோது, நம்மிடம் என்ன இருந்தது? ஒன்றுமில்லை. பணமில்லை, பணியாற்ற ஆட்கள் இல்லை. நமது தர்க்கத்தைக் கேட்டு பலர் கூறினர்,’நீங்கள் கூறுவது சரிதான். ஆனால் கட்சியைக் கட்டுவது அவ்வளவு எளிதா? எந்தத் தலைவரும் இல்லை, ஊடகங்களின் விளம்பரம் இல்லை. முடியவே முடியாது. நடக்கவே நடக்காது’. அவர்களிடம் நான் கூறிய பதில் ஒன்றுதான். ‘சரி, அது நடக்காது என்று நான் ஒப்புக்கொண்டதாக வைத்துக் கொள்வோம். ஆனால், அதற்குப் பின் நான் என்ன செய்யவேண்டும்? நான் அடிமையாகி விடுவதா? நான் ஒரு ஏஜெண்டாக செயல்படவேண்டுமா? எனது மனசாட்சியை நான் விற்றுவிடவா? நான் புரிந்துணர்ந்ததற்கு மாறாக நான் செயல்பட வேண்டுமா? அதை என்னால் செய்ய முடியாது. பசியினால் தெருவில் விழுந்து செத்தாலும், எனது தலையை உயர்த்தி கண்ணியமாகவே நான் சாவேன்... நான் சுட்டுக் கொல்லப்படலாம் அல்லது பசியினாலும் நான் சாகலாம் என்பதும் எனக்குத் தெரியும். நான் பசியினால்தான் இறந்தேன் என்பது ஒருவருக்குக்கூடத் தெரியாமல் போகலாம். ஆனால் அதற்கு நான் என்ன செய்யமுடியும்? தற்காலிகமாக எனது முயற்சிகளில் நான் தோற்றுப் போகலாம். அந்த வகையில், என்னால் செய்ய முடியவில்லை என்று நான் எண்ணலாம். அது எனது இயலாமை. இயலாமையால் அவமானம் என்பது ஒன்று. ஆனால் மனசாட்சியை விற்பது என்பது குற்றம். எனவே நான் தோற்றுவிட்டேன், சந்தேகமே இல்லை ஆனால் நான் தலைகுனியவில்லை. ஆம், நான் பட்டினியால் செத்தேன். அதனால் நான் எதுவுமே செய்யவில்லையா? பசியால் இறப்பதன் மூலம் இந்த சமூகம் கிழடுதட்டிவிட்டது, காலாவதியாகிவிட்டது என்ற செய்தியை தான் வழங்கிச் செல்கிறோம் என்பதை ஒவ்வொரு புரட்சி யாளரும் அறிவர். இந்த சுரண்டல் அமைப்பைப் புரட்சியின் மூலம் தூக்கியெறிய வேண்டும் என்ற புரட்சியாளனின் அறைகூவல் செவிகளுக்கு எட்டாமல் சென்றுவிடாது. அவரது அறை கூவலுக்கு மக்கள் ஒவ்வொருவராகச் செவிசாய்த்து, ஒவ்வொருவராக அணிவகுப்பர்”

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கருத்தை 1967லேயே தோழர் சிப்தாஸ் கோஷ் பதிவு செய்தார். அவரது போராட்டம் வீணாகவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். அவரது போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. கட்சி மேலும் மேலும் பலம்பெற்று முன்னேறி வருகிறது. இந்தப் பாதையில் பயணித்து நாட்டின் ஒடுக்கப்பட்ட லட்சக்கணக்கான மக்களின் விடுதலைக்கான போராட்டத்தை நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து வெற்றிபெறச் செய்யமுடியும். அதன் மூலம் தோழர் சிப்தாஸ் கோஷின் கனவை நனவாக்குவோம். அதை நான் உறுதியோடு நம்புகிறேன். இந்த வார்த்தைகளோடு, இந்த அலுவலகத்தை நான் திறந்துவைக்கிறேன்.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார், அலுவலகம் :பு.எண்:16 (ப.எண்.18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம்: அய்யனார் ஆப்செட், எண்.10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website :www.sucic.in